# ஸத்திய தரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 5- அத்தியாயம் 10.

## எனது சோதனை காலம்.

ஆசிரமத்தை ஆரம்பித்த சில மாதங்களுக்குள் நான் சிறிதும் எதிர்பாராத வகையில் நாங்கள் சோதனைக்குள்ளாகினேம். அடக்கத்தோடும், கௌரவத்துடனும் கூடிய ஒரு தீண்டாதார் குடும்பம் என் ஆசிரமத்தில் சேர விரும்புவதாகவும், அவர்களை நான் சேர்த்துக்கொள்ள முடியுமா என்றும் அமிர்தலால் தாக்கர் எழுதிய கடிதம் எனக்குக் கிடைத்தது. இக்கடிதம் கண்டதும் எனக்கொன்றும் தோன்றவில்லை. இத்தகைய ஒரு பெரியாரிடமிருந்து அறிமுகம் செய்வித்துக்கொண்டு இவ்வளவு விரைவில் என் ஆசிரமத்தில் சேரப் பிரியப்படும் தீண்டாதார் குடும்பமொன்று இருக்குமென்று நான் நினைக்கவே இல்லை. எனவே நான் அக்கடிதத்தை என் நண்பர்களுக்குக் காண்பித்தேன். அவர்கள் அதை ஆவலுடன் வரவேற்ருர்கள்.

ஆதலின், நான் அத்தீண்டாத குடும்பத்தினரைச் சேர்த்துக் கொள்ளத் தயாராயிருப்பதாகவும், ஆனல் அவர்கள் ஆசிரம விதிகளுக்குக் கட்டுப்படுதல் அவசிய மென்றும் அமிர்தலால் தாக்கருக்குப் பதில் எழுதினேன்.

## தீண்டாத குடும்பச் சேர்க்கை.

பம்பாயில் உபாத்தியாயராக இருந்த தூதாபாய், அவர்மனைவி தானிபென், அவர்கள் குமாரி லக்ஷ்மி ஆகியோர் எங்கள் ஆசிரம விதிகளை ஒப்புக்கொண்டு அதில் சேர்ந்தார்கள். லக்ஷ்மி அப்போது தவழ்ந்து விளையாடும் குழந்தையாக இருந்தாள். ஆனல் அவர்களைச் சேர்த்துக்கொண்டதால் ஆசிரமத்துக்கு உதவி செய்து வந்த பல நண்பர்களுக்கு மனக்கசப்பு ஏற்பட்டுவிட்டது. முதல் கஷ்டம் கிணற்றை உபயோகிப்பதில் ஆரம்பமாயிற்று. அக்கிணற்றில் பாதியை பங்களாவின் சொந்தக்காரர்கள் உபயோகித்து வந்தார்கள். கிணற்றைக் காவல் காத்து வந்தவன் எங்கள் பாத்திரத்திலிருந்து ஒரு துளி ஜலம் கிணற்றில் விழுந்தாலும் அது அதனை அசுத்தமாக்கி விடுமென்று புகார் செய்தான். அதனல் அவன் எங்களையும் கேவலமாக நினைத்ததுடன் தூதாபாயையும் தூஷித்து வந்தான். நான் எல்லாரிடமும் அவன் திட்டுவதைப் பொறுத்துக் கொள்ளும்படியும், ஆனல் எல்லாக்கஷ்டங்களினூடேயும்தண்ணீர் இழுக்கும்படியும் கூறினேன். நாங்கள் அவனைத் திட்டாததைக் கண்ட அவன் வெட்கமடைந்து எங்களுக்குத் தொந்தரவு செய்வதை நிறுத்தி விட்டான்.

எங்களுக்குப் பண உதவி செய்து வந்தவர்களில் பலர் அவ்வுதவியை நிறுத்தி விட்டார்கள். எங்கள் ஆசிரம விதிகளை ஒப்பக் கொள்ளக் கூடிய தீண்டாத குடும்பத்தினரும் இருப்பார்களா என்று என்னிடம் கூறிய நண்பர் இவ்வாறு ஒரு குடும்பத்தார் முன் வருவார்களென்று எதிர் பார்க்கவேயில்லை.

## சமூக பகிஷ்கார ஏற்பாடு.

பண உதவிகளை யெல்லாம் நிறுத்தி விட்டதோடு மட்டுமல்லாமல் எங்களைச் சமூக பகிஷ்காரம் செய்வதென்றும் ஏற்பாடு செய்வதாக வதந்தியும் உலாவிற்று. இத்தகைய கஷ்டங்களையெல்லாம் ஏற்க நாங்கள் தயாராகவே இருந்தோம். என் நண்பர்களிடம் எங்களைப் பகிஷ்கரித்த போதிலும், எங்களுக்குச் சௌகரிய மளிக்காத போதிலும் நாங்கள் ஆமதாபாத்தை விட்டுப் போகக் கூடாது என்று சொல்லி வைத்தேன். நாங்கள் தீண்டாதார் வசிக்கும் இடங்களுக்குப் போய் அங்கே தேக உழைப்பினல் கிடைப்பனவற்றைக் கொண்டு வாழ்வோ மென்றும் கூறிவிட்டேன்.

ஒருநாள் மகன்லால் காந்தி, என்னிடம், [illegible]

தென்றும், அடுத்த மாதச் செலவுக்கு ஒன்றும் கிடையா தென்றும் அறிவிக்கும்படியான அத்தகைய நிலைமை ஏற்பட்டு விட்டது. அப்போது நான் அப்படியானல் தீண்டாதார் வசிக்குமிடங்களுக்குப் போய் விடுவோம் என்று கூறினேன்.

## எனது இறைவன் அருள்.

நான் சோதனைக்கு ஆளானது இது தான் முதல்தடவை யன்று. ஒவ்வொரு முறையும் கடைசி சமயத்தில் எனக்கு இறைவன் அருள் செய்யாமலிருப்பதில்லை. எங்கள் பணக் கஷ்டத்தைப் பற்றி மகன்லால் என்னிடம் அறிவித்த சில தினங்களுக் கெல்லாம் ஒரு நாள் காலை, ஆசிரமத்திலிருந்த குழந்தைகளில் ஒன்று என்னிடம் ஓடி வந்து எங்கள் ஆசிரம வாயிலில் ஒரு சேத் மோட்டாரில் காத்துக் கொண்டிருப்பதாகவும், அவர் என்னைப் பார்க்க விரும்புவதாகவும் அறிவித்தது. நான் வெளியில் சென்று அவரைக் கண்டேன். அவர், "நான் ஆசிரமத்துக்கு ஏதேனும் சிறு உதவி செய்ய விரும்புகிறேன். அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?" என்று கேட்டேன்.

நான், கட்டாயம் ஏற்பேனென்றும், அப்போது பண மில்லாமல் கஷ்டப்படுவதாகவும் உண்மையை ஒப்புக் கொண்டேன். அவர், தான் மறு நாள் வருவதாகவும், நான் அங்கேயே இருப்பேனு என்றும் கேட்டார். நான் இருப்பே னென்று சொன்னதும் அவர் போய் விட்டார்.

## எதிர்பாராத பேருதவி.

மறு நாள் அதே வேளையில், அதே மோட்டார் எங்கள் ஆசிரம வாயிலில் வந்து நின்றது. சிறுவர்களும் வந்தார்கள். அவர் உள்ளேயே வரவில்லை. நானே வெளியில் சென்று அவரைப் பார்த்தேன். அவர் 13 ஆயிரம் ரூபாய் பெறுமான நோட்டுகளை என்னிடம் கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

நான் இந்த உதவியை எதிர் பார்க்கவில்லை. அதிலும் எத்தகைய முறையில் அளிக்கப்பட்ட உதவி பாருங்கள்! அப் பெரியார் இதற்கு முன் எப்போதும் எங்கள் ஆசிரமத்துக்கு வந்ததில்லை. எனக்குத் தெரிந்த வரையில் நான் அவரை ஒரே முறை தான் சந்தித்திருக்கிறேன். எங்களைப் பற்றி விசாரிக்கவுமில்லை; எங்களை வந்து பார்க்கவுமில்லை. உதவி செய்து விட்டுப் போய் விட்டார். இது எனக்கு முன் பின் இல்லாத அனுபவமாகும். ஒரு வருஷச் செலவுக்கு எங்களுக்குக் கவலை இல்லாம லிருந்தது.

## ஆசிரமத்திலும் அபிப்பிராய பேதம்.

வெளியில் எங்களுக்கு மாருகப் பலர் அபிப்பிராயங் கொண்டிருந்ததே போல் ஆசிரமத்திலும் அபிப்பிராய பேதங் கொண்டிருந்தனர். தென்னுப்பிரிக்காவில் தீண்டாத ஜாதி நண்பர்கள் என் வீட்டுக்கு வந்து என்னுடன் உண்டும், தங்கியும் இருப்பது வழக்கமாயிருந்தும் ஆசிரமத்திலேயே தீண்டாத ஜாதி குடும்பத்தினரைச் சேர்த்துக் கொண்டது என் மனைவிக்கும், மற்ற மாதர்களுக்கும் பிடிக்க வில்லை. அவர்கள் தானி பெனை வெறுக்காத போதிலும் அவரிடம் அசிரத்தையாக நடந்து கொள்வதை நான் கண்டு கொண்டேன். பண மில்லாத கஷ்டம் என்னைத் துன்புறுத்த வில்லை. ஆனல் இந்த உள் குழப்பத்தைப் பொறுக்க என்னல் முடிய வில்லை. தானிபென் என்பவர் ஒரு சாதாரண மாது. தூதாபாய் மட்டும் சிறிது கல்வி கற்றவராயினும் பல விஷயங்களை நன்கு அறிந்து கொண்டவர். அவருடைய பொறுமையை நான் பாராட்டினேன். சிற்சில சமயங்களில் அவரும் மன வருத் [illegible]

வாக அவர் அதிகப் பொறுமையுள்ளவர். சாதாரண தவறுகளை யெல்லாம் பொறுத்துக் கொள்ளும்படி நான் அவரைக் கேட்டுக் கொண்டேன். அவர் அதற்கு ஒப்பியதுடன், தன் மனைவியையும் அவ்வாறே ஒப்புக் கொள்ளும்படி கூறினர்.

## தீண்டாமைக்கு சாவு மணி.

அக் குடும்பத்தினரை ஆசிரமத்தில் சேர்த்ததால் எங்களுக்கு அதிக படிப்பினைகள் ஏற்பட்டன. ஆசிரமத்துக்கு உதவி செய்ய வேண்டியவர்கள் தீண்டாமை விலக்கை ஒப்புக் கொள்ளக் கூடியவராக இருக்க நேர்ந்தது. இப்போதும் ஆசிரமத்துக்குச் செலவாகும் பெருந் தொகையை வைதீக ஹிந்துக்களே கொடுத்து வருவதால் தீண்டாமைக்குச் சாவு மணி அடித்தாய் விட்டதென்றே நிச்சயமாய்க் கூறலாம். மேலும் தீண்டா தாருடன் சம பந்தி போஜனமும் செய்யப்படுகிற எங்கள் ஆசிரமத்துக்கு நல்ல ஹிந்துக்களும் உதவி செய்து வருகிருர்கள்.

இது விஷயமாய் எங்களுக்கு எத்தகைய கஷ்டங்கள் ஏற்பட்டன; அவைகளை நாங்கள் எவ்வாறு சமாளித்தோம் என்னும் பற்பல விஷயங்களைப் பற்றி விவரம் கூருமல் மேற் போக்காகப் போக வேண்டி யிருப்பதற்காக வருத்தப்படுகிறேன். இனி வரும் அத்தியாயங்களிலும் நான் இவ்வாறே செய்ய வேண்டி யிருக்கும். நான் பல விஷயங்களை விட்டுவிட வேண்டியதிருக்கிறது. பலருடைய அனுமதியில்லாமல் அவர்களுடைய பெயர்களையெல்லாம் என் வாழ்க்கை அனுபவத்தில் இழுப்பது தவறு. அவர்களுடைய அனுமதி பெறுவதும் கஷ்டம்; அன்றியும் அது அவசியமு மில்லை. ஆதலின் என் சரித்திரத்தின் மீதிப் பகுதியை சில முக்கியமான விஷயங்களைத் தள்ளி விட்டே எழுத வேண்டி யிருக்கும். எனினும் இறைவன் கிருபை இருந்தால் ஒத்துழையாமைக் காலம் வரை நிகழ்ந்த வற்றைக் கூறி விட உத்தேசித்திருக்கிறேன்.

# இந்தியாவின் பசிப்பிணி

பம்பாயிலும், கல்கத்தாவிலும், ரெயில்வேக்களிலும் நேரும் வேலை நிறுத்தங்களையும், கதவடைப்புகளையும்பற்றிப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின்றன. இந்தியா முழுவதும் யோசனையற்ற எதிர்ப்பு அதிகம் பரவியிருக்கிறது. நான் முன்னமே சொன்னது போல் 250 லட்சம் ஜனங்களுக்கு மேல் தங்கள் வாணுள் முழுதும் பசித்திருக்கிருர்கள். பசி என்ருல் எத்தகையபசி? குடலைப் பிடுங்கித் தின்னும் பசியாகும். பசி தீர்வதற்கு வேண்டிய வெறுஞ்சோறும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. சிறிது சிறிதாக நிதானமாகச் சித்திரவதை செய்யும் கொடிய பட்டினியால் ஆயிரக்கணக்கானவர்கள் எப்போதும் இறந்த வண்ணமிருக்கிருர்கள். இந்தியாவில் நான் செய்த பிரயாணங்களின் பயனுக, மற்ற எல்லாப்பிரச்னைகளிலும் பயங்கரமான பெரிய பிரச்னையாக என் உள்ளத்தில் இதுபதிந்துவிட்டது. இந்தியாவின் தொல்லை யெல்லாம் வயிற்றுத்தொல்லைதான். அதுவே அடிப்படையான, முதன்மையான தொல்லையாகும். இந்தப் பயங்கரமான பொருளாதாரப் பிரச்னையின் முன்னல் அரசியல் பிரச்னைகள், சாதிசமயப் பிரச்னைகள் எல்லாம் அற்பமானவையாகின்றன. இந்த ஏழை ஸ்திரீகளும் புருஷர்களும், குழந்தைகளும் தினம் ஒருபிடி அரிசி அதிகம் பெறுகிருர்கள் என்னும் செய்தி வருமானல் அந்த சந்தோஷச் செய்திகொண்டு வந்தவனுக்கு நான் என்ன கேட்டாலும் கொடுத்து விடுவேன். குடும்பவருமானம் தினம் ஓர் அணு அதிகமாயிற்றென்ருலும் இந்தியத் தொழிலாளிகளின் நிலைமை எவ்வளவோ அபிவிருத்தி யடைந்து விட்டதென்று சொல்லலாம்.

மிஸ்டர் பர்ஸல்

# ஓர் இராக்கதை.

(ஸ்ரீ அ. கு. அண்ணுமலை எழுதியது)

ஒரு நாளிரவில் வானத்தில் பூரணச் சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களை வீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். சமுத்திரத் திரைகள் சந்தோஷ ஆரவாரத்தால் அம்மதியை வரவேண்டும் வரவேண்டும்; நீடூழி நிலைக்க வேண்டுமென நல்வரவேற்பது போல் கோஷித்தன. அவைகள் பிரிந்து சந்தித்த காதலர்கள் போல் ஒன்ருேடொன்று உருண்டு புரண்டு கொண்டிருந்தன. காதலர்களும், அன்பான நண்பர்களும், நல்லோர்களும், பாப்பாக்களும் அகமிக மகிழ்ந்து இன்பந்துய்த்தனர். இனிய தென்றல் காற்று வீசிக்கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட இன்பகரமான வேளையில் மனிதர்களெல்லாம் சந்தோஷத்தில் மயங்கி இஃதே மோக்ஷமென்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். நண்டு இனி மேலோகத்தைப் பற்றிக் கவனிப்பாம்.

ஆகாயத்தில் மேக மகாசபையொன்று கூடுவதற்காக மேகங்கள் அங்கு மிங்கு மோடிக்கொண்டிருந்தன. அனைத்து மொன்ருய்க் கூடுவதற்காக இடியெனும் வேட்டுப்போடப்பட்டது. கூட்டமும் கூடியது. பலவும் பல பல விதமாகத் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பது போல் குமுறின. அங்கு அக்கிராசனம் வகித்த ஒரு பெரிய மேகம் பின் வருமாறு பேசியது:—

சோதர மேகங்களே! சூரியன், சந்திரன் முதலியவர்களை விட நாம் எந்த வகையிலும் தாழ்ந்தவர்களல்ல. சகல விதத்திலும் மேம்பட்டவர்களே. சுயநலஞ் சிறிதுங்கருதுவதில்லை. சில மனிதர்களைப்போல நாம் வெளியில் பரோபகாரம் செய்வதுபோல் வேஷம் பாவனை செய்து உள்ளே சுய நல பொக்கிஷமாயிருப்பதில்லை. ஞாயிறு, திங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவைகளைக்காட்டிலும் நாம் உலகினர்க்கு எவ்வளவு அதிக அவசியமும், தேவையும் என்பதை அறிவாளிகளே யறிவர். நாமின்றேல் உலகம் சிறிது காலங்கூட ஜீவித்திருக்க வியலாது. ஆனல் நம்மை வெகு சிலரே அத்தி பூத்தது போல் பூஜிக்கிருர்கள். அவர்களை மட்டும் தினமும் வரவேற்றுத் தியானித்துப் பூஜிக்கிருர்கள். பெரிய பரோபகாரிகளுக்கு சிறிய உபகாரிகளுக்கிருக்கும் கௌரவமும் பெருமையுமில்லை. இவைகளுக்கெல்லாம் நாம் நம்திறமையைக்காட்டாததே காரணம். ஆதலால் நாம் ஒற்றுமையாய்ப் படைதிரட்டி அவைகளை முற்றுகை போட்டு ஜெயித்து அவைகளை பூமிக்குத் தெரியாமல் மறைக்கவேண்டும். இன்றேல் நாமிருந்துமில்லாதவர்களே. உலகையே ரக்ஷிக்கவும் பக்ஷிக்கவும் சக்தியுள்ள நாம் ஒரு விநாடியில் ஜெயித்து விடலாம். (கரகோஷம் முழங்கினது.)

இக்கொள்கையை அனுசரித்து இன்னும் பல மேகங்கள் பல பலவிதமாய்ப் பேசி முடித்தன.

இவைகளையெல்லாம் மிகப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த விவேகமுள்ள ஒரு மேகமெழுந்து:—

சபையோர்களே! எல்லோர்க்கும் வந்தனம். என் தாழ்மையான அபிப்பிராயத்தையும் செவியுற்று ஆசி அளிப்பீர்களென நம்பிப் பேசுகிறேன். இங்கு பரோபகாரத்திற்காக உழைக்கிருேமெனக் கூறப்பட்டது. உண்மையே. அதை நாமே சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியமேயில்லை. பரோபகாரத்திற் குழைப்பவர்கள் பலனையோ, புகழையோ எதிர்பார்க்கக் கூடாது. புகழுக்காகப் பரோபகாரம் செய்பவர்கள் சுயநல ரூபிகளே. அஃதோடு பிறர் நம்மைக்காட்டிலும் அதிகமாகப் பரோபகாரத்தால் கீர்த்திபெறுவதைக்கண்டு பொருமைகொண்டு அவர்களைக் கவிழ்க்க துராலோசனை செய்து எதிர்ப்பது பாதகமும் யோக்கியமற்ற தன்மையுமே ஆகும். நாம்

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் 12-வது மகாநாடு,

### அருப்புக்கோட்டை.

நாடார் 12-வது மகாநாடு கூடும் தேதி செய்மையில இல்லை. இம் மகாநாடு பல காரணங்களை முன்னிட்டு அதிக முக்கியமானது என்று பலர் கருதுவது உண்மையே. மகாநாட்டை நம் மாகாண முதன் மந்திரி டாக்டர். சுப்பராயன் அவர்கள் திறந்து வைக்க ஒப்புக் கொண்டது மிகவும் விசேஷித்த சம்பவமாகும். தஞ்சை ஜில்லா சுயமரியாதை இயக்கத் தலைவர்களுள் ஒருவராக விளங்கும் பொறையாறு ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்கள் அக்கிராசனம் வகிக்க ஒப்புக் கொண்டது இன்னொரு குறிப்பிடத்தக்க சம்பவமாகும். இவ்விரு பேரறிஞர்களின் கூட்டுறவால் மகாநாடு சிறப்பாக நடை பெறுவதுடன் நாடார் மக்கள் வரம்பிலா நன்மை அடையக் கூடும் என்பது திண்ணம்.

இம் மகாநாட்டில் பல முக்கிய பிரச்சினைகள் விவாதத்திற்கு வரும். அவைகளுள் தலை சிறந்து விளங்குவது ராயல் கமிஷன் பிரச்சினை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். கமிஷனர்கள் எங்கள் விசாரணையை ஆரம்பிக்கு முன், நாட்டில் ஒரு சாராரால் பிரஸ்தாபிக்கப்படும் பஹிஷ்காரக் கூச்சல் ஒடுங்கி சகல கக்ஷியினரும் ஒத்துழைப்பில் முனைந்து நிற்பர் என்பது ஒரு தலை. வங்காளத்திலும், பஞ்சாபிலும் முஸ்லீம்கள் ஒத்துழைப்புக் குறி கொண்டு அறிக்கைகள் வெளியிட்டு விட்டனர். பம்பாயில் முஸ்லீம்களும், பிராமணரல்லாதாரும் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிட விருக்கின்றனர். சென்னை மாகாணத்தில் பஹிஷ்காரக் கூச்சல் பலிக்காது என்பது வெளிப்படை. இந் நிலையில் நாடார் மக்கள் ஏமாறுது சாக்கிரதையாயிருத்தல் வேண்டும். கமிஷன் முன் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துவதுடன், நம் சமூகத்திற்கு மத்திய அரசாங்கத்திலும் மாகாண அரசாங்கத்திலும் தனி இருக்கைகள் ஒதுக்க வேண்டிய அவசியத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக நம் மாணவர்களின் உயர்தரக் கல்வி அபிவிருத்தியை முன்னிட்டு இப்பொழுது நம் குலத்தவர்களால் நடத்தப்பட்டு வரும் உயர்தரக் கலாசாலையில் ஒன்றைப் பிரதம கல்லூரியாக்க வேண்டிய விஷயங் குறித்து ஆலோசித்தல் வேண்டும். இவ் விருபதாம் நூற்றாண்டில் உயர்தரக் கல்வியின் அவசியத்தை உணராதார் யாண்டுமிலையாதலால் இது குறித்து அதிகம் எழுதல் வேண்டிய தில்லை.

மூன்றாவதாக நிர்வாகம் குலைந்து சீர்கேடடைந்து பல பக்கங்களுள் சிதறுண்டு கிடக்கும் நம் பொதுப் பேட்டை, சத்திரம், தேவாலயங்களை சீர்திருத்தம் செய்யும் விஷயத்தைக் குறித்து ஆலோசித்தல் வேண்டும்.

இன்னவை யன்ன பல முக்கிய பிரச்சினைகள் கான்பரன்ஸ் முன்னிலையில் கிளத்தப்படுமாதலால் நாடார் மக்கள் யாவரும் அருப்புக்கோட்டைக்கு விரைந் தெழுமாறு வேண்டுகிறோம். மகாநாட்டைச் சிறப்பிக்க வேண்டிய பொறுப்பு நாடார் என்ற ஒவ்வொருவரையும் சார்ந்தது என மீண்டும் ஞாபக மூட்டுகிறோம்.

நாடார் பரிபாலன சங்கத்தார்,

விருதுநகர்.

---

**நாடார் பெரு மக்களே !**

**தமது குல நலங் கோரிய பல அரிய தீர்மானங்களை மகாநாட்டில் கொணர்ந்து நிறை வேற்றுங்கள். நிறைவேற்றிய வினைத்தும் செயலில் காட்டுங்கள்.**

## திருநெல்வேலி ஜில்லா நாடார் பெருமக்களுக்கோர் வேண்டுகோள்.

கனவான்களே !

நாடார் சமூகம் பெருந்தொகையினராயிருந்து வருவது திருநெல்வேலி ஜில்லாவில் தான் என்பது யாவருமறிவோம். நம்மவரில் பெரிய தனவந்தர்களும், பிரபல வியாபாரிகளும், கல்வித் தேர்ச்சி பெற்றவர்களும் அஜ் ஜில்லாவில் மிகுதியாயுண்டு. இத்தகைய அஜ்ஜில்லாவில் சில கிராமங்களில் நம்மவர்களின் நிலைமை புகழுக் குரித்தாயில்லாதிருப்பது மிகவும் விசனிக்கற்பாலது. கல்வியில்லாமலும், நம் சமுகாசாரத்திற்கு அப்பாற்பட்டும், உலகவியல் உணர்வற்றும் அவர்கள் அந்தகாரத்தில் இருப்பது கண்டு நம் குல அறிவாளிகள் கண்ணீர் உகுக்கின்றனர். அவர்களுக்கு நாடார் மகாஜன சங்கம் என்பது என்ன வென்று தெரிய வராது.

நாம் முன்னேற்ற மெனும் குறிப்பிட்ட விடத்திற்குப் பந்தயம்போட்டு ஓடிக் கொண்டிருக்கும்போது நம்மில் சிலர் பின்னால் படுத்துறங்கிக் கொண்டிருந்தால் பந்தயம் ஜெயிப்ப தெங்ஙனம்? சொற்ப தொகையினர் தானே; அது பற்றிக் கவலையில்லையென்று விட்டு விடுவதற்கில்லை. அப்படியாயின் அது குல நலம் குறித்ததாகாது. ஒரு குடும்பத்தில் எல்லோரும் க்ஷேமமாயிருத்தலே மாண்பு. அதில் சிலர் தாரித்திர திசை யுள்ளாரெனின் அங்கென்ன சகோதர வாஞ்சை காணக்கிடக்கின்றது? இதையே ஒக்கும் நாம் நம்மில் சிலரை முன்னுக்குக் கொண்டுவர முற்படாதிருப்பது. எனவே பொதுவாக நம் குலத் தலைவர்களும், சிறப்பாகத் திருநெல்வேலி ஜில்லா கன்னிலை நாடார்களும் அவர்களுக்கு விழிப்புண்டாக்கி அவர்களை நம் சமூகாசாரத்தை யொட்ட ஒழுகச் செய்து உலகப் போக்கை யுணரச்செய்யக் கடப்பாடுளார்கள்.

இஃது எவ்வகையில் கூடுமெனின், அஜ்ஜில்லாவில் கான்பரன்ஸ்கள் நடத்துவதினுல் என்பேன். அஜ்ஜில்லாவில் கான்பரன்ஸ்கள் நடத்தி விசேஷக் கிளர்ச்சி யுண்டுபண்ணினுல் அவர்கள் விழிப்புக் கொண்டுவிடுவார்கள். குறைந்தது மூன்று கான்பரன்ஸ்களாவது தொடர்ந்து நடத்திவிட்டால் நல்ல பலனுண்டு. ஆகையால் 12-வது கான்பரன்ஸுக்கு அருப்புக்கோட்டைக்கு திருநெல்வேலி ஜில்லா நாடார் தலைவர்களும், பிரமுகர்களும் மிகுதியாய் வந்து 13-வது கான்பரன்ஸை அழைத்து, பின்னும் இரண்டு கான்பரன்ஸ்கள் அஜ் ஜில்லாவிலேயே நடத்தி வைப்பதற்காக முனைந்து நிற்க வேண்டிக் கொள்கிறேன்.

மீ. சி. சுந்தரநாடார்,

போடிநாயக்கனூர்.

---

# நாடார் மகாஜன சங்கம்

# 12-வது மகாநாடு,

## அருப்புக்கோட்டை.

விபவஹு ஆனி மீ 21, 22, 23
(1928-ஹு ஜூலை மீ 4, 5,6) தேதிகளில் நடைபெறும்.

குமாரமங்கலம் ஜமீன்தாரும்,
சென்னை கவர்ன்மெண்ட் முதல் மந்திரியுமான
கனம். டாக்டர்- பி. சுப்பராயன் எம். ஏ., பி. ஸி. எல்.,
எல். எல். டி. அவர்கள் மகாநாட்டைத்
திறந்து வைப்பார்கள்.

பொறையாறு, ஸ்ரீமான் வெ. கனகசபைநாடாரவர்கள்
அக்கிராசனம் வகிப்பார்கள்.

---

## ஆராய்ச்சிக் கோவை.

யானைக்குட்டி பிறந்த உடனே 175 ராத்தல் முதல் 200 ராத்தல் வரை நிறையுள்ள தாயிருக்குமாம்.

*　　*

சுருட்டி எடுத்துக்கொண்டு போகக் கூடிய மிகமெல்லிய கிராமபோன் தகடுகள் இப்போது செய்யப்பட்டிருக்கின்றன.

*　　*

சமீபத்தில் லண்டன் கண்காட்சி சாலைக்கு ஒருவர் 86000 விதவிதமான வண்ணுத்திப் பூச்சிகளை இனமாக அளித்தாராம்.

*　　*

சோவியட் ருஷியாவின் 100 வயதும் அதற்கு மேலும் ஆகி ஜீவிய வந்தர்களாயிருப்பவர்கள் 29,498 பேர் இருக்கிறார்களாம்.

*　　*

அமெரிக்க ஐக்ய இராஜ்யத்தில் ஒவ்வொரு மணி நேரத்திலும் சராசரி 10,000 விபத்துகள் பல துறைகளிலுமாகச் சேர்ந்து நேரிடுகின்றனவாம்.

*　　*

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் தனிப்பட அதிகம் வரி செலுத்துபவர் பார்ட்வான் மகாராஜாதானும். இவர் வருஷத்துக்கு 50 லட்சம் ரூபா வரி கட்டுகிறாராம்.

*　　*

சென்னை மாகாணத்தில் 10423 கள்ளுக்கடைகளும், 5788 சாராயக்கடைகளும், 604 அபினிக்கடைகளும், 423 கஞ்சாக்கடைகளும் இருக்கின்றன வென்று ஒருவர் கணக்கிட்டிருக்கிறார்.

*　　*

இப்போது உருளைக் கிழங்கிலிருந்து ரப்பர் செய்து வருகிறார்கள். ஆனால் இது மட்டதரமாகவே இருந்து வருகிறதாம். அதை அபிவிருத்தி செய்து முதல்தரமாக்குவதற்கு முயற்சி நடந்து வருகிறது.

*　　*

சென்னை மாகாணத்தில் மதுபானத்தின் பயனாக 1923-24-ம் வருஷத்தில் 8013 பேரும், 1924-25-ம் வருஷத்தில் 7644 பேரும், 1925-26-ல் 7394 பேரும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டார்களாம்.

*　　*

உலகிலே மிகக்குளிர்ந்த இடம் வடதுருவம் என்பதாகச் சொல்லப்படுவது முற்றும் உண்மையன்று. அதனிலும் குளிர்ந்த இடம் பர்லினிலுள்ள ஒரு சாஸ்திர ஆராய்ச்சி சாலையாகும். இங்கு ஆராய்ச்சி செய்வதற்காகச் சில சாதனங்களால் தர்மா மீட்டரில் பூஜ்யத்துக்கும் கீழே 452 டிக்ரிகுளிர் இருக்கும்படி செய்திருக்கிறார்கள்.

*　　*

உலகிலே மொத்தம் 2976 பாஷை ... டிருக்கிறது. ஆனால் இவற்றில் அகா

## தன்னுயிர் போலவே மன்னுயிரும்.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் 2-வது வருட 3-வது பிரசுரம்.)

மாமிசம் புசிப்பது நன்றெனச் சொல்லும் தமிழ்நாட்டுத் தாய் தந்தையர்களே ! உலகத்தில் கடவுளால் படைக்கப்பெற்ற சகல ஜீவராசிகளும் நாம் நமது உயிரை எப்படிப் பொன்போல் போற்றுகின்றோமோ அதே மாதிரியாகவே தங்கள் தங்கள் உயிர்களைப் பொன்னேபோல் போற்றுவதும், நமக்கும் நமது குடும்பத்தினர்க்கும் எவ்விதமான ஆபத்துகளும், கஷ்ட நஷ்டங்களும் வாராவண்ணம் நாம் பாதுகாத்துக்கொள்வதும், ஒருக்கால் ஆபத்து நேர்ந்த காலத்தில் வருந்துவதும் போலவே மிருகங்களும் பக்ஷிகளும் தங்கள் குட்டிகளுக்கும், குஞ்சுகளுக்கும் எவ்விதமான ஆபத்தும் வரா வண்ணம் அதி ஜாக்கிரதையாகப் பாதுகாத்துவருவதும், ஆபத்து நேர்ந்த காலத்தில் மனிதர்களைப்போல் வாய்விட்டுப் புலம்புவதும், வாய் பேச முடியாத ஏழை உயிர்ப் பிராணிகள் கண்ணீர்விட்டுக் கதறுவதும் நம் ஒவ்வொருவருக்கும் தெரியாத விஷயமல்லவே.

இவ்வுண்மைகளனைத்தும் தெரிந்த மனிதர்கள் பல மிருகங்களையும், பக்ஷிகளையும், விசேஷமாய் ஆடு, கோழி, மீன் முதலிய பிராணிகளின் உயிர்களை கொஞ்சமும் இரக்கமின்றி கவர்ந்தும் கத்திகொண்டு கர கரவெனக் கழுத்தை யறுத்தும், அவைகளின் உடலிலிருந்து உயிரை நீக்குகின்றார்களே, இவர்களின் ஜீவ இரக்கமற்ற தன்மைதான் என்னே! துக்கம் ! துக்கம் !!

தங்கள் காலில் ஒரு சிறு முள்ளும் தைக்க சம்மதிக்காத மனிதர்கள், தங்கள் தாய் தந்தையர்களோ மனைவி மக்களோ தங்கள் மத்தியினின்று இம் மண்ணுலகை விட்டுப் பிரிவதற்கு எள்ளளவேனும் சம்மதியாத மனிதர்கள், தங்களுக்கு எவ்விதமான தீங்கும் செய்யாததும் தங்களிடம் அடைக்கலமெனப் புகுந்ததுமான ஆடு, கோழிகளை நம்பிக்கைத்துரோகமாகக் கேள்வி கேட்பாரின்றி கொலை செய்து அவைகளின் புலாலைப் புசித்து தங்கள் குடலை நிரப்புவது தருமமா ? இது முறையா ? அந்தோ ! அநியாயம் ! அநியாயம் !!

ஐயா பெரியோர்களே ! அம்மா தாய்மார்களே ! ஒரு வண்டிக்காரன் தன் மாட்டைக் கம்பினுல் அடிப்பதைப் பார்த்தால் மனம் சகிக்க முடியாமல் வண்டிக்காரனை சண்டாளப்பாவி ! என்று கூறும் ஜீவகாருண்யமுள்ள மக்களையுங்கூட மயக்கி நம்மைத் துரோகியாகவும், கொலைபாதகனுகவும் செய்விப்பது எது ? மாமிச உணவின் மேலுள்ள இச்சையன்றி வேறெதுவும் உண்டோ ? இல்லவே இல்லை. ஆகையால், ஆறறிவு படைத்த மக்களாகிய நாம் நம்மைத் தீய வழிக்கு ஆளாக்குவதும் சுகாதாரக் கேட்டிற்கு ஆளாக்குவதுமான மாமிச உணவை அறவே ஒழித்து தேக ஆரோக்கியமும், சற்குணமும் உண்டாக்கக்கூடிய மரக்கறி உணவை உண்டு நற்பயனடைவோமாக.

தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிது
ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும்அருள். (தமிழ்வேதம்.)

---

கரீக ஜனங்கள் தங்கள் கருத்தை வெளியிட உபயோகிக்கும் பாஷையென்னும் பெயருக்கே தகுதியற்ற தனிப்பட்ட கொச்சைப் பேச்சுகளும் அடங்கியிருக்கின்றன. உண்மையில் பாஷைகள் என்று சொல்லக்கூடியவை உலகில் 860 தான் உண்டு. இவற்றில் 48 ஐரோப்பாவிலும், 153 ஆசியாவிலும், 424 வட அமெரிக்கா தென் அமெரிக்காவிலும், 117 பசிபிக் தீவு...

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## விடுமுறை.

நம்மித்திரன் வாசஸ்தலமாகிய இவ் வருப்புக்கோட்டையில் நடை பெறப் போகும் நமது 12-வது மகாநாட்டு வைபவத்தில் நம்மித்திரன் காரியஸ்தர்களெல்லோரும் கலந்துகொள்வதினாலும், மகாநாட்டுத் தினங்களை விசேஷித்த நாட்களாக இவ்விடத்திய நம் மகாஜனங்கள் கொண்டாடுவதாலும் நம் மித்திரன் காரியாலயத்திற்கு மகாநாட்டுத்தினங்களில் விடுமுறையாகுமாகையால் அடுத்து 9-7-28ல் வெளியிடாகவேண்டிய பத்திரிகை நிறுத்தப்பெற்று 16—7—28 ல் விசேஷ அனுபந்தத்துடன் பத்திரிகை வெளியிடப் பெறுமென் பதைச் சந்தா நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானேஜர்.



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்தூ வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

## நாடார்குலமித்திரன்

விபவ ஞு ஆனி மீ ௰கூ உ

## இரு மகாநாடுகள்.

நமது ஜன சமூக முன்னேற்ற சாதனமாயமைக்கப்பெற்றிலங்கும் "நாடார் மகாஜன சங்க"த்தின் 12-வது மகாநாடும், அரிய சேவை சாதிக்க வல்ல நம் வாலிபர்களின் 2-வது மகாநாடும் அருப்புக்கோட்டையில் அதி விமரிசையாய் ஒன்றை யொன்று மருவி நடை பெறப் போவது பற்றி அக மகிழ்வுறுகின்றோம். மகாநாட்டுத் தினத்தை மகாஜனங்கள் வெகு ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்களென்பதற் கைய மில்லை. இன்னும் இரண்டே நாட்களிருக்கின்றன. மகாநாடு சம்பந்தமான சகல காரியாதிகளும் முடிவுற்றன. உபசரணைக் கமிட்டியார் பிரதிநிதிகளுடையவும், தலைவர்களுடையவும் வருகையை எதிர் நோக்கியிருக்கின்றனர். மகாநாட்டுக்கு ஏராளமான பிரதிநிதிகள் விஜயஞ் செய்வார்கள் என்று நம்புகின்றோம்.

இது வரையும் நடை பெற்றிருக்கும் மகாநாடுகள்பதினொன்றிலும் இம்முறை நடை பெறவிருக்கும் 12-வது மகாநாடே சிறப்புடைத்தாம் என்பதற்குப் பல சான்றுகளுள வென்பது நம் மகாஜனங்கள் அறியாததல்ல. மகாநாடு கூடும் இது சமயம், ராஜீயத் துறையில் ஒரு சிக்கலான நிலைமை யேற்பட்டிருக்கிறது. ராயல் கமிஷனின் மறு முறை வருகை தினம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ராயல் கமிஷன் பிரச்சினை நம் மகாஜனங்களின் மனதைப் பெரிதும் ஈர்த்து நிற்கின்றது. ராயல் கமிஷனை முன்னிட்டு நாட்டில் ஒவ்வொரு சமுகமும் அரசாங்கத்தில் அதனதன் நலன் நாடி விழிப்புக் கொண்டு அதற்கான நடபடிகள் செய்து கொண்டிருக்கிறது. இது சமயம் நாம் வாளா விருந்து விட்டால் பின்னால் ஒரு கஷ்ட நிலைக்குள்ளாகவேண்டி வரும். கால மறிந்து நடவா விடில் கோலமழிந்து குறையுறுவ தியல்பு. எனவே நாமும் இது போழ்து அத் துறையில் நம்மைச் சீர்படுத்திக் கொள்வது அவசியமானதாயிருக்கிறது.

மேலும் நம் சமுதாயத்தில் பல முக்கிய பிரச்சினைகள் எழும்பியிருக்கின்றன. அவைகள் முடிவுக்கு வரவும், சமுக வேலைகள் தீவிரப்படவும், ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் நிதியை விர்த்தி செய்யவுமான விஷயங்கள் குறித்து ஆலோசனை செய்ய வேண்டியதிருக்கிறது. இந் நிலையில் நம் குலாபிமானிகள் அனைவரும் ஒன்று கூடி ஆழ்ந்த யோசனையோடு கூடிய யுக்தானு சாரங்களைக் கையாளுவது முறையாகும். ஆகையால் ஆங்காங்குள்ள அபிமானிகளனைவரும் மகா நாட்டுக்கு விஜயஞ் செய்து பல அரிய தீர்மானங்கள் கொணர்ந்து தங்கள் தங்கள் மேலான அபிப்பிராயங்களை வெளியிட்டு உசிதமான வழிகளைக் கொள்ளுவதற்கு முடிவு செய்ய வேண்டுகிறோம். ஆலோசிக்கப் பெறும் விஷயங்க ளத்தனையும் முக்கியமானவையாயிருப்பதால் அபிமானிகள் தவறாது விஜயமாக வேண்டுமென மறுமுறையும் வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறோம்.

இது சந்தர்ப்பத்தில் வாலிபர் மகாநாடு கூடுவதும் ஓர் குறிப்பிடத் தக்க விஷயமாகும். நம் சமுகப் பிற்கால வாழ்வுப் பெருமை வாலிபர்கள் கையிற்றானிருக்கிற தென்பது குற்றமாகாது. நம் இயக்கங்களும், வேலைகளும் பெரும்பாலும் இளங் காளைகளாகிய அவர்களால் தான் சித்திப்பனவாகும். வாலிபர்கள் நம் மகாஜன சங்கத்திற்குப் பக்க பலமாய் நின் றுழைக்கும் ரீதியில் இது காலை நம் சமுகத்திடை யெழுந்து நிற்கும் பிரச்சினைகளை முடிவுக்குக் கொணர்வதில் பெரிதும் ஒத்தாசை புரிவார்கள் என நம்புகிறோம். வாலிபர் மகாநாட்டிலும் முன்னேற்றத்திற்கான தீர்மானங்கள் பல நிறைவேறும் என்பது வாலிபர்களிடையே தோன்றியிருக்கும் உணர்ச்சி வாயிலான் அறியக் கிடக்கிறது. அவர்கள் தகுந்த தீர்மானங்கள் நிறைவேற்றி செயலில் காட்ட முன் வருவார்களாக. மகாநாடுகள் இரண்டும் மங்களகாமாய் முடிவெய்தப் பிரார்த்திக்கின்றோம்.

## வாலிப நாடார் சங்கம், கல்லூருணி.

ஷை சங்கத்தின் அங்கத்தினர் பொதுக்கூட்டம் 27-6-28ல் இரவு 8-மணிக்கு சங்கம் ஆபிஸில், ஸ்ரீமான் எஸ். பி. அய்யநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் விஜயம் செய்திருந்த முக்கியஸ்தர்கள் பின்வருமாறு:—

ஸ்ரீமான்களான ச. பூ. அய்ய நாடார், மயி. ச. செம்புலிங்க நாடார், மயி. சுந்தரபாண்டிய நாடார், ல. ச. கனகசபாபதி நாடார், ச. சி. சங்கரலிங்கநாடார், ஆ. சுடலை முத்து நாடார், பெ. நல்லதம்பிநாடார், உ. கி. உத்தண்டக் கருப்பநாடார், கா. பெ. வேல்நாடார், ச. சிதம்பரநாடார் சி. வ. சுப்பையநாடார் ஆகியவர்கள்.

### தீர்மானங்கள்.

1. சங்கத்தின் சட்டங்கள் ஸ்ரீமான் க. அ. புன்னைமுத்துநாடாரவர்களால் வாசிக்கப்பெற்று ஏகமனதாய் ஒப்புக் கொள்ளப்பெற்றன.

2. ஸ்ரீமான் ச. சிதம்பரநாடார் அவர்களால் பிரரேபிக்கப் பெற்று ஸ்ரீமான் ல. ச. கனகசபாபதிநாடார் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஸ்ரீமான் ச. பூ. அய்யநாடார் அவர்களை சங்கத்தின் பிரஸிடெண்ட்டாக நியமிக்கப்பெற்றது.

3. ஸ்ரீமான்களான ல. ச. கனகசபாபதி நாடார் அவர்களையும் க. அ. புன்னைமுத்து நாடார் அவர்களையும் காரியதரிசிகளாகவும், மற்றும் அபிமானிகள் பதின்மூவர்களைக் கவுன்வில் பெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

4. சங்கத்திற்கு அங்கத்தினர்கள் அதிகம் சேர்க்கவேண்டும் என்ற தீர்மானம் ஸ்ரீமான் ல. ச. கனகசபாபதி நாடார் அவர்களால் கொணரப்பெற்று, சபையோர்களால் ஏகமனதாய் நிறை வேற்றப்பட்டது. உடன் நேரத்திலேயே, புதிய அங்கத்தினர்களாக அனேகரின் கையொப்பங்கள் வாங்கப்பெற்றன.

5. சங்கத்தின் நிதியிலிருந்து, "சதானந்த வாசகசாலை" என்ற பெயருடன் ஒரு வாசகசாலை ஏற்படுத்தத் தீர்மானிக்கலாயிற்று.

6. சங்கத்திற்கு வேண்டிய தளவாடங்களை வாங்கவும், அச்சு ரசீதுகள் தயாரிக்கவும், பொறையாறு ஸ்ரீமான் த. ரத்தினசாமிநாடார் அவர்கள் போட்டோ படம் ஒன்று வாங்கவும் காரியதரிசிகளுக்கு அனுமதி செய்யப்பெற்றது.

7. சங்கத்தின் ஆரம்பக் கொண்டாட்டம், சமீபத்தில் நடத்தவேண்டிய தென்றும், அதற்குரிய ஏற்பாடுகளைக் கவனித்து ஸ்பெஷல் கௌன்ஸில் கூட்டி அதில் ஆஜர் செய்யக் காரியதரிசிகளுக்கு உத்தரவு செய்யப்பெற்றது.

8. அருப்புக்கோட்டையில் நடைபெறும், நமது நாடார் மகாஜன சங்கம், 12-வது கான்பரன்ஸ் டிக்கட் பெற்றவர்கள் தவிர, இன்னும், மற்றவர்களும், டிக்கட் பெற்று ஷை மகாநாட்டுக்கு அதிகமான பிரதிநிதிகள் விஜயமாகி சிறப்பிக்க வேண்டுமென்று தீர்மானமாயினது.

9. ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரி நிதியை க்ஷேமித்து வைக்க வேண்டியதும், அந்நிதியிலிருந்து உதவி பெறும் மாணவர்கள், ஏழைகள் தானாவென்பதைச் சோதிக்க ஒரு கமிட்டி நியமிக்கவேண்டியதும், ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரியில் எடுத்துக்கொண்ட முயற்சியை ஒவ்வொரு தலைவரும் எடுத்து, தலைக்கட்டு வரி வசூலிக்கவும், அங்கத்தினர்கள் சேர்க்கவும் வேண்டியதும், நாடார்கள் வசிக்கும் ஒவ்வொரு ஊரிலும், நாடார்களுக்குள் ஏற்படும் கக்ஷிப்பிரதி கக்ஷிகளைத் தீர்த்து வைக்கவேண்டியதும், சங்கத்தின் பிரசாரம் நாடார் வசிக்கும் ஊர்தோறும் தவறாமல் மாதம் ஒரு முறை நடை பெறத்தக்க ஏற்பாடு செய்தலும் அவசியமானதென்பதை அண்மையில் அருப்புக்கோட்டையில் நடைபெறும் நாடார்மகாஜன சங்கம் 12-வது ஜெனரல் மீட்டிங்கிற்கு எழுதியனுப்பக் காரியதரிசிகளுக்கு அனுமதி செய்யப் பெற்றது.

பின்னர் அக்கிராசனர் முடிவுரையுடன் சபை இனிது கலைந்தது.

ல. ச. கனகசபாபதிநாடார்,
க. அ. புன்னைமுத்துநாடார்,
காரியதரிசிகள்.

## நாடார் 12-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

### உபசரணைக்கமிட்டி அறிக்கை நிர் 8.

மகாநாட்டிற்கான வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன.

வெளியூர்களுக்கு டிக்கெட் விற்பனைக்குப் போயிருந்த அபிமானிகள் எல்லாம் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். சுமார் 3000 டெலிகேட்கள் வரையிலும் வருவார்களென பல இடங்களிலிருந்தும் சமாசசாரம் வருவதிலிருந்து தெரிய வருகிறது.

சங்கம் பிரஸிடெண்ட் ஸ்ரீமான் வெ. கனகசபைநாடார்அவர்கள் ஜூலை மீ 3உ மாலையில் இவ்விடம் வருவார்கள். கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் 4உ முற்பகலில் இவண் விஜயம் செய்வார்கள்.

ஜூலை மீ 3, 4உகளிலும் இரண்டு தலைவர்களையும் அழைத்து ஊர்வலம் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் மகாநாட்டிற்கு விஜயம் செய்யும் அன்பர்கள் யாவரும் 3உ முற்பகலிலேயே இவண் விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சு. ஆ. முத்துநாடார்,
பொதுக்காரியதரிசி.

### வாலண்டியர்களின் பொதுக்கூட்டம்.

நாளது விபவ ஆண்டு ஆனித் திங்கள் 20-ம் நாளி (3-7-28)ல் "நாடார் குல மித்திரன்" பத்திராதிபரும், ஷை மகாநாட்டின் பொதுக்காரியதரிசியுமான ஸ்ரீமான் சு. ஆ. முத்துநாடார் அவர்கள் தலைமையின் கீழ் வாலண்டியர்களின் பொதுக்கூட்டம் நடைபெறும். ஆகையால் வாலண்டியர்கள் அனைவரும் ஜூலை மீ 3உ பகல்12-மணிக்குள் இவண் விஜயம் செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ச. சு. பழனிச்சாமிநாடார்,
ஜெனரல் கேப்டன்.

## நாடார் தொண்டர்படை 1-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

இம்மகாநாடு விபவஞு ஆனி மீ 23 உக்குச் சரியான 1928-ஞு ஜூலை மீ 6உயில் நடைபெறும். இதற்குச் சுயமரியாதைத் தலைவரும், வைக்கம் வீரரும், "குடியரசு" பத்திராதிபருமான உயர் திருவாளர் ஈ. வே. இராமசாமிநாயக்கரவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள். நம் சமுகாபிவிர்த்தியில் முனைந்து வேலை செய்வதற்குத் தொண்டர்களே பெரிதும் வேண்டற்பாலர் என்று யாரும் அறிவர். அத்தகைய தொண்டர்குழாம் கூடி மகாநாடு நடத்துவதில் நம் சமுகத்தாரனைவரும் ஆதரவு செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள். இப்போது நம் சமுகத்திற் கிருந்துவரும் ஆலயப் பிரவேசச் சமத்துவக் குறை யகற்றி சமுகத்தொண்டு புரியலான இதன் நோக்கத்திற்கான தீர்மானங்களை நிறைவேற்றி செயல்களைக் கையாள இம்மகாநாடு அருப்புக்கோட்டையில் கூட்டப்படுகிறது. ஆகையால் நம் 12-வது மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் நம் மகாஜனங்கள் ஒவ்வொருவரும் இம்மகாநாட்டுக்கும் விஜயம் செய்ய வேண்டுகிறோம்.

எஸ். கே. ராமசாமிநாடார்,
சேனாதிபதி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அரிய வுரைகள்.

பிரிட்டிஷார் நம்மை விட்டுப்போய் விட்டால் அன்னியர் படையெடுத்து வருவார்களென்று சிலர் பயங்காட்டுகிருர்கள். பிரிட்டிஷாரைப் போகச் செய்வதற்கு நமக்கு வலிமையிருந்தால் அந்த வலிமையினலேயே அன்னியர் படை யெடுப்பைத் தடுக்கமுடியாதா? மேலும் இப்போது நாம் அன்னியர் ஆதிக்கத்தில் தானே இருக்கிருேம்? இதைவிடப் பெரிய ஆபத்து என்ன வரப்போகிறது?

—ஸ்ரீ பண்டித ஜவஹரிலால் நேரு.

பல கண்டங்களில் யுத்தம் செய்து புகழ்பெற்ற சைன்யங்கள் இந்தியாவிலிருக்கின்றன. ஐரோப்பாவின் யுத்த களங்களில் தேசக்கக்ஷியாரின் சுதந்திரத்திற்காகச் சண்டையிட அவை தகுதியுள்ளனவாயிருந்தன. அவசியமானபோது இந்தியாவின் விடுதலைக்காகப் போரிடவும் அவையே போதும்.

—ஷியார்.

ஒரு தேசத்தின் பலம் அதனுடைய தற்காப்பு சைன்யங்களை மட்டும் பொறுத்திருக்கவில்லை. சர்வ தேசிய நிலைமையே அதிகமாய்ப் பொறுத்திருக்கிறது. போலந்து, லிதுவானியா, ஜெக்கோ ஸ்லோவகியா, ஹாலந்து, யூகோஸ்லாவியா, போர்ச்சுக்கல், பல்கேரியா, ருமேனியா முதலிய தேசங்களில் எதுவும் ஒரு வல்லரசை எதிர்த்து நிற்கமுடியுமா? ஆயினும் அவையெல்லாம் சுதந்திரம் பெற்றிருக்கவில்லையா?

—ஷியார்.

சுதந்திர இந்தியாவுக்கு எவ்வித அபாயமும் வாராது. வந்தாலும் அதற்கு நாம் ஈடு கொடுக்க முடியும். அப்படியே முடியாமல் நாம் விழுந்து படுவதாயினும், அதற்கு நாம் துணிந்தேயாக வேண்டும். அபாயத்துக்கு அஞ்சி நமது பிறப்புரிமையைக் கை விடுதல் போல் அவமானம் வேறில்லை.

—ஷியார்.

சுதந்திர இந்தியாவை எந்தத்தேசமும் தாக்கத்துணியாது. ஏனெனில் இந்தியா ஒரு தேசத்தின் ஆதிக்கத்துக்குட்படுவதை மற்றைய தேசங்கள் பார்த்துக் கொண்டிருக்கமாட்டா.

—ஷியார்.

சமஸ்தானத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் குறைந்த பக்ஷம் வற்ருத குடி தண்ணீர்க் கிணறு ஒன்று, மேடாகாத நல்லகுளம் ஒன்று, திருப்திகரமாய் நடக்கும் பள்ளிக்கூடம் ஒன்று, நன்ருய் நிர்வகிக்கப்படும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று, மருந்து போதியவளவு உள்ள வைத்தியசாலை யொன்று இவற்றையேற்படுத்துவதுதான்வருங்காலத்தில் அரசாங்கத்தின் நோக்கமாயிருக்கும்.

—மைசூர் திவான் மிர்ஸா இஸ்மேல்.

வேறு என்ன தேவையிருந்தாலும் டி நோக்கத்துக்கே அரசாங்கத்தின் பணம் முதன்மையாகச் செலவழிக்கப்படும். ஒவ்வொரு கிராமத்திலும் டி இன்றியமையாத சாதனங்கள் ஏற்படும் வரையில் அரசாங்கத்தார் தங்கள் கடமையைச் செலுத்தியதாக எண்ணிச் சந்தோஷமடைய முடியாது.

—ஷியார்.

இந்திய ஜனங்களின் ஆதிக்கத்திலில்லாத இந்தியக் கப்பற்படை மகோதா வெறும் கேலிக்கூத்துத்தான். இது சட்டமானல் இந்தியாவில் கப்பற்படை ஒன்றிருக்கும். ஆனல் சில சந்தர்ப்பங்களில் இந்தியாவின் முக்கிய சத்துருவாகக்கூடியவர்கள் அதை எடுத்துக்கொண்டு தங்கள் அதிகாரம் உள்ளவரை உபயோகிப்பார்கள். இந்திய ஜனங்களின் சம்மதமின்றி அக்கப்பற்படைக்கு யார் பணங்கொடுப்பதென நிர்ணயிக்கும் உரிமையும் அவர்களுக்கே இருக்கும்.

—ஸ்ரீ விட்லி. எம். பி.

இன்றைய தினம் பாதி வங்காளம் கொடும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் உத்தியோக அறிக்கைகளில் 'விளைவுக்குறைவு' என்ற சொற்ருெடரே காணப்படுகிறது. மந்திரிகளும் நிர்வாகசபை அங்கத்தினர்களும் வருஷம் 64,000 ரூபாயில் கொழுத்து [illegible] லக்ஷக்கணக்கான ஜனங்கள் போஷணை இன்மையாலும், மலேரியா, காலரா முதலிய நோய்களாலும் செத்துவருகிருர்கள்.

—ஆசிரியர் பி. சி. ரே.

இந்தியர்கள் நர மாமிச பக்ஷணிகள் என்ருவது அல்லது அவர்கள் சமுகத்துக்குக் கீழ் தலையுள்ளவர்களென்ருவது யாராவது எழுதினல், பிரிட்டிஷ் ஜனங்களில் ஒரு பெரும் பகுதியார் அதை அப்படியே நம்பித் திருப்தியடைவார்கள்.

—ஸ்ரீ ஜே. ஸி. மொலோனி.

கிரேட் பிரிட்டனில் மிகவும் குறைவாகச் சம்பளம் பெறும் தொழிலாளியின் சம்பளம் இந்தியாவில் எட்டுத் தொழிலாளிகளின் சம்பளத்துக்குச் சமமாயிருக்கிறது.

—ஸ்ரீ பிரன்னர் பிராக்வே.

## நாஸரேத் அங்கமங்கலம் சாலை.

நாஸரேத்திலிருந்து கிழக்கே அங்கமங்கலம் மார்க்கமாக ஓர் புதிய ரோடு போட்டு 4 நிர் ரோட்டுடன் இடணைக்க வேண்டியதின் அவஸ்யம் 14—6—28ல் வெளிவந்த "சுதேசமித்திரன்" பத்திரிகை வாயிலாய், "பொதுநலப்பிரியன்" என்ற நிருபரால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆத்தூர் பிர்க்காவில் இது ஓர் முக்கியமான பாதையாகும். இந்த ரோட்டை வெகு துரிதமாய் ஆரம்பித்து முடிப்பதில் சிரமமும் அதிகமில்லை. ஏனெனில், நாஸரேத்திலிருந்து கிழக்கே பிரகாசபுரம் சந்தை வரையும் ஏற்கனவே ரோட்டு வேலை முடிந்தாகிவிட்டது. தவிரவும் 4 நிர் ரோட்டிலிருந்து மேற்கே அங்கமங்கலம்வரையும் மற்ருெரு கிளை ரோடு பேட்டாகியிருக்கிறது. ஆகையால் அங்கமங்கலத்திற்குமேற்கிலும், பிரகாசபுரத்திற்குக் கிழக்கிலும் இடையில் சொற்பப்பாகமே மணல் வெளியாய்—அலங்கோலமான பாதையாயிருக்கிறது. இந்த சொற்பப் பாகத்தில் சரல் ரோடு போடுவதற்குச் செலவும் அதிகமேற்படாது. இதிலும், பொறையூர் பெரிய பாலத்திலிருந்து, தெற்கே ரயில்வே லயன்வரை கிராம ரோடு போடுவதற்கு ஏற்கனவே மாகாண கிராம ரஸ்தா கிரான்ட்டிலிருந்து, சொற்பத்தொகை ஸாங்க்ஷனகியிருப்பதால், இந்த வகையிலும் ஒரு சாதகமிருக்கிறது. இன்னமும் இந்த ரஸ்தாவை பாரஸ்ட் மார்க்கமாய் விடாமல், கச்சினுவிளைக்குக் கிழக்கே ரயில்வே லயன் பி. கிராஸ் ஓரமாய்க் கொண்டுபோனல் விசேஷ சிக்கனமேற்படலாம். இந்தப் புது ரோடு அமைப்பின் அவஸ்யத்தைப்பற்றி மனுக்கள் மூலமாயும் பத்திரிகைவாயிலாயும், அங்கத்தினர்களிடம் நேரில் எடுத்துச்சொல்லியும், தூத்துக்குடி தாலுகா போர்டாரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருப்பதால் கூடிய சீக்கிரம் போர்டார் இந்த ரோடு வேலையை ஆரம்பிப்பார்களென நம்புகிருேம். இதே ரஸ்தாவை பிரகாசபுரத்திலிருந்து கிழக்கே நாலுமாவடி, வீரமாணிக்கம் மார்க்கமாய் அம்மன்புரம் ரஸ்தாவுடன் இணைத்துவிடுவதென்ருல், பொது ஜனங்களுக்குப் பேருதவியாயிருக்குமென்பதை எவரும் மறுக்கமுடியாது. தாலுகா போர்டு எலெக்ஷனில் தீவிர சிரத்தையெடுத்துக்கொண்ட முக்கியஸ்தர்கள், ஒவ்வொரு பகுதியிலுமுள்ள கஷ்டங்களை அடிக்கடி அந்தந்த இலாகாவின் கவனத்திற்குக் கொண்டுவந்து அனுகூலம் பெறுவதையும் முக்கிய கடமையாகக்கொள்ளவேணும். அங்கத்தினர்களுக்கு அவ்வப்போது வேண்டும் தகவல் கொடுத்து உற்சாக மூட்டினல் தம்மாலியன்ற முயற்சியெடுக்க முற்படுவார்கள். ஆகவே சம்மந்தப்பட்ட ஊர் பிரமுகர்கள் இப்பொதுநல விஷயமாய் ஊக்கமெடுத்து, மகஜர்களனுப்பி முயற்சிப்பதுடன், அங்கத்தினர்களும் விசேஷ கவனம் செலுத்துமாறு கோருகிறேன்.

கே. கல்யாணசுந்தரன்,
கொளும்பு.

## செய்தித்திரட்டு.

திருச்சினப்பள்ளி மலைக் கோயிலில் சுயமரியாதை வீரர்கள் ஸ்ரீமான்களான ஸ்ரீ ஜே. எ. ராமநாதன், கண்ணப்பர், தண்டபாணிபிள்ளை முதலியவர்களைப் பிரவேசம் செய்யவிடாதபடி தடுக்கப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் 144 அவர்கள் விண்ணப்பத்திற்கிணங்க ரத்து செய்யப்படவில்லையாகையால் அதை மீறப்போகிருர்கள். மீறப்போகிருர்கள் என்பதை யறிந்து கோயில் அதிகாரிகள் கோயிற் கதவுகளை மூடிவிட்டனர். இது பற்றி வெகு கிளர்ச்சியேற்பட்டிருக்கிறது. கோயிற் கதவுகள் திறக்கப்படும்வரை கோயில் முன் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிருர்கள். சத்தியாக்கிரகம் செய்ய பல பாகங்களிலும் சுயமரியாதைத் தொண்டர்கள் எழும்பியிருக்கிருர்கள். வைக்கம் வீரர் ஸ்ரீ. ராமசாமி நாய்க்கரவர்கள் யோசனையைக் கொண்டு சத்தியாக்கிரக தினம் குறிக்கப்படும். கோவில் திறந்ததும் 144 மீறப்படும்.

* *

கல்கத்தாவிலுள்ள திட்கூர் காகித கம்பெனியார் புனு சுதேசி கண்காட்சியில் வைத்து வினியோகம் செய்யும் பொருட்டு $2\frac{1}{2}$ டன் காகிதம் வரை இனமாகக் கொடுத்திருக்கிருர்.

* *

லண்டன் கார்ப்பரேஷன் சபையார் 20 லக்ஷம் பொன் செலவழித்து ஸ்பைல் பீல்ட்ஸ் மார்க்கட்டைப் புதுப்பிக்க உத்தேசித்திருக்கின்றனர். அதில் 5000 ஜனங்கள் நடமாடலாம். ஆயிரக்கணக்கான வியாபாரிகள் ஆங்கு வியாபாரஞ் செய்ய இடம் அமைக்கப்படும். சாமான்கள் ஏலம் விடுவதற்குப் பல சிறு கட்டடங்கள் கட்டப்படும். இதுவே உலகத்தில் பெரிய மார்க்கெட்டாகும்.

* *

ருது சாந்தி வயது மசோதாவைக் குறித்து ஆராய்வதற்காக ஸ்ரீமான்களான, ஸர். மார்பண்ட் ஜோஷி தலைவர், ராவ்பகதூர் பண்டித கன்யாலால், எ. ராமசாமி முதலியார், கான் பகதூர் மாகுப்மியான் இமாம் ஆகியவர்களும், ஸ்ரீமதிகளான ஒப்ரீயன் பீடான், பிரிஜ்லால் நேரு ஆகியவர்களும் அடங்கிய கமிட்டி யொன்று நியமிக்கப்பட்டு விட்டது.

* *

கவி. ரவீந்தர நாத் தாகூருக்கு மைசூர் திவான் ஸ்ரீ மிர்ஸா முகம்மது இஸ்மாயில் "சாரல்டன் ஹௌஸ்" என்னுமிடத்தில் ஒரு விருந்தளித்தார். அவ்வைபவத்திற்கு ஜெயபுரி மகாராஜா, நேபாளத்தைச் சார்ந்த ராஜா ஜய பிருதிவி சிங் பகதூர் முதலியவர்களும், பல பிரபலஸ்தர்களும் விஜயஞ் செய்தனர். ஸ்ரீ ரவீந்தரரின் தேகநிலை சற்று குணமடைந்திருக்கிறது. வந்திருந்த விருந்தினர்களுடன் தாராளமாய்ப் பேசினர்.

* *

சென்னையில் ருக்மணியம்மாள் எனும்ஓர்பெண்சமையல்செய்துகொண்டிருக்கும் போது புடவையில் தீப்பற்றி தேகம் முற்றிலும் ரணமாகி விட்டது. உடனே சிகிச்சை செய்ய ஆஸ்பத்திரிக் கெடுத்துச் சென்ருர்கள். ஆங்கு அம்மாது மாண்டனள்.

* *

ஸ்ரீ லாய்ட் ஜார்ஜ் பத்திரிகைத் தொழிலைவிட்டுவிட்டு அரசியல் முறையில் இறங்குவதாகத் தீர்மானித்திருக்கிருர். வரும் தேர்தலில் அவர் தாராளக் கக்ஷி சார்பில் வேலைசெய்வார். லாய்ட் ஜார்ஜ் பத்திரிகைகளுக்குக் கட்டுரை வரைவதில் மகாநிபுணர். 6 வருஷத்தில் கட்டுரை வரைவதில் $1\frac{1}{4}$ லக்ஷம் பொன் சம்பாதித்திருக்கிருர். உலகத்தில் அவரது கட்டுரைக்குத்தான் அதிகப்பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷ முடிவிலிருந்து அரசியல் விஷயத்திலிறங்குவார்.

* *

கொல்லத்தில் ஒரு பெண்ணை போர்னியோ தீவிலுள்ள ஒருவருக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாக நிச்சயித் திருந்தார்கள். ஆனல் மணமகனிடமிருந்து கலியாணத்திற்கு வர முடியவில்லை யென்று முகூர்த்த வேளையில் சமாசாரம் கிடைத்தது. [illegible] யிடச் சொல்லி விவாகத்தை முடித்துவிட்டார்கள். மணப்பெண்ணும் தன் கணவனுடன் வசிக்க போர்னியோவுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

* *

மைசூர் நாடெங்கும் நாட்டுப்புறங்களில் கிணறுகள் வெட்டுவதற்காக 50,000 ரூபாய் உத்தரவு செய்திருக்கிருர்கள்.

* *

வங்காளத்தில் சித்தாகாங்குக் கருகே ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பித்தளைப் புத்த விக்ரகங்கள் சில கிடைத்திருக்கின்றன.

* *

சென்னைக்கு வந்திருக்கும் ஆகாயக் கப்பல்கள் சமீபத்தில் மதுரைக்கும் பெங்களூருக்கும் செல்லுமாம். சென்னையில் நாள்தோறும் பலர் ஆகாய விமானத்தில் ஏறி வானத்தில் பறந்து செல்லுகிருர்கள்.

* *

ஆப்பிரிக்காவில் சில பகுதிகளில் யானைகள் உழவுத் தொழிலை செய்கின்றனவாம்.

* *

ஐரோப்பிய யாத்திரை போயிருந்த அமீர் அரசர் இந்த வாரத்தில் காந்தாரம் வழியாகக் காபூலுக்குத் திரும்புவார்.

* *

பூலோகத்தில் மிகவும் பழைமையான நகரங்களுள் ஒன்ருன டாமஸ்கசில் சமீபத்தில் நேர்ந்த தீவிபத்தால் அந்த நகரத்தின் ஒரு பகுதி அழிந்து போய்விட்டதாம்.

* *

லண்டனில், ஹிந்து வைதீகர்களுக்காகக் கட்டிய 'ஆரியபவன்' என்ற விடுதியை லண்டனிலுள்ள ஹைக்கமிஷனரான ஸர் அதுல சந்திர சாட்டர்ஜி திறந்து வைத்தார். அதனை யொட்டி ஒரு கோயில் கட்டவும் முயற்சி நடக்கிறது.

* *

கடலூரைச் சேர்ந்த மேட்டுபட்டி என்ற சிற்றூரில் ஏழாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் காளிவிழாவில் திருவிழா முழுமையிலும் மொத்தம் 1500 எருமைக் கடாக்கள் பலியாயினவாம். ஆடு கோழிகளுக்கு அளவில்லையாம்.

* *

மிஸ்ஸோரியில் ஒரு தாவர சாஸ்திரி மேலே காய்க்கும் தக்காளிச் செடியையும் தரை மட்டத்திற்குக் கீழே கிழங்குவரும் உருளைக்கிழங்குச் செடியையும் ஒன்ருக ஒட்டுச் சேர்த்து உண்டாக்கி யிருக்கிருராம். அடியிற் கிழங்கும் மேலேகாயும் உண்டாயிருப்பது வியப்பாயிருக்கிறதாம்.

* *

சென்னை பிரம்பூரில் மாபூப் பீபியின் புருஷன் திருவல்லிக்கேணியில் நடக்கும் மாரடிப்புத் திருவிழாவுக்குத் தமது மனைவியை அனுப்ப வேண்டாமென்று தாயாரிடத்திலும் தமையனிடத்திலும் சொல்லிவிட்டு வெளியூருக்குப் போய்விட்டார். ஆயினும் திருவல்லிக்கேணியிலிருந்து மாபூப்பீபியின் தாயார் பிரம்பூர் வந்து மாமியார் மைத்துனன் சொல்லைக்கேளாமல்மகளை அழைத்துச் சென்ருர். சிறிது தூரம் சென்றவுடன், மைத்துனன் ஷேக் உசேன் பின்னே போய்சென்று இருவரையும் குத்திவிட்டான். குத்திய மைத்துனன் மீது வழக்கு ஏற்பட்டிருக்கிறது.

* *

இலங்கை—குரு நாக்கலில் மிஸ்டர் எ. எ. ரேய்மன்ட் என்பவருக்குச் சொந்தமான 'மருல்மட' என்னுந் தோட்டத்தில் மிகவும் பெரிய இரண்டு மலைப் பாம்புகள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை இரண்டும் பூரண வளர்ச்சி யுடையன. ஒன்று 26 அடி நீளமும், மற்றது 13 அடி நீளமு முடையதாக விருக்கின்றன. ஒன்று பெண் பாம்பாகும்; அது 300 முட்டைகளை இட்டு அவைகளுக்கு மேல் சுருண்டு கிடக்கக் காணப்பட்டது. ஒவ்வொரு முட்டையும் தாராவின் முட்டைப் பரிமாணமாயிருந்தது. எல்லா முட்டைகளும் சங்கிலி போன்ற ஒரு தொடுப்பால் ஒன்ருே டொன்று தொடுக்கப்பட்டிருந்தன. இப்பொழுது அவைகள் கொழும்பில் "ரேய் மன்ஸ் யாட்" என்னுமிடத்திலிருக்கின்றன. அவைகளை [illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## முத்துப் பதக்கம்.

ஏழை யிடத்துள்ள பணம் பாலைவனத்து நீர் எனப் பகர்வது பொருந்தும்.

*   *

எந்த ஒரு கூடா வொழுக்கத்தையும் ஆரம்ப தசையிலேயே ஒழித்தல் வேண்டும். வளர விட்டு விட்டால் பின் அதினின்றும் விலகுவது அசாத்தியம். கிள்ளி யெறியக் கூடிய முளை வளர்ந்து மரமாகி விட்டால் கோடரி கொண்டன்றோ வெட்ட வேண்டும்?

*   *

பசிக்குத் தகுந்த ருசி; ஆவலுக்குத்தகுந்த ஆத்திரம்; விழிப்புக்குத் தகுந்த நித்திரை; அழகுக்குத் தகுந்த காதல்; வேனலுக்குத் தகுந்த நிழல் விருப்பம்; நூலுக்குத் தகுந்த நுண்ணறிவு; அன்புக்குத் தகுந்த நண்பு.

*   *

ஒருவர் பிறர் விஷயத்தில் வெகு தாராளமாய் நடந்து விடுகிறார். பின் அவர் விஷயத்தில் பிறர் நுழையும் போது நெருப்பிடை பட்டவர் போல் வெம்புகிறார். இது ஏனோ!

*   *

பணக்காரன் பின்னாலும் பத்துப் பேர்; பைத்தியக்காரன் பின்னாலும் பத்துப் பேர். ஆனால் பணக்காரன் பின்னாலுள்ள கூட்டத்திற்கும், பைத்தியக்காரன் பின்னாலுள்ள கூட்டத்திற்கும் தன்மை வித்தியாசம் உண்டு. ஒன்று இரத்தல்; மற்றொன்று எள்ளல். எனவே தொடரும் ஆட்களின் தன்மையோராது தொகை கொண்டு பெருமை கொள்ளல் பேதமை.

*   *

தூண்டிலி லகப்பட்ட மீன் நெடுங் கயிற்றில் நீந்திப் போவது போலவே சகல ஜீவராசிகளும் நெடுங் கயிறெனும் வாழ்வு மட்டும் உலகிடை நிலை கொண்டிருக்கின்றன.

*   *

ஒன்றை வெகு நாளாய் எதிர் பார்த்திருந்து அது பலிதமாகாது போயின், ஒன்று அதை யடைய அதிக விருப்பேனும், அன்றி அதை யடியோடு விலக்க வெறுப்பேனும் உண்டாகிறது.

*   *

நாம் எங்கிருந்து வந்தோம்; எங்கு போவோம்; எப்போது போவோம்; ஏன் வந்து போக வேண்டும் எனவும், நம் அவயவங்களின் அமைப்பு, அவற்றின் செயல், ஆன்மாவின் தன்மை, அதன் பிரிவு முதலியவை பற்றியும் யோசித்துப் பார்த்தால் ஒரு பெருந் திகைப்பான ஆச்சரியம் உண்டாகிறது. அவ் யோசனையை மற்ற சராசரப் பொருள்களிடத்துச் செலுத்தினாலு மப்படியே.

*   *

தர்மஞ் செய்யப் பிரிய மில்லாத பணக்காரர்களும், அப் பிரியங் கொண்ட ஏழைகளும் உலகில் உண்டு. இவர்களிடத்தில் யாசகத்திற்குப் போகிறவர் சனி பணம் பெற முடிவது அரிது எனினும் முறையே அருவருப்பும், அன்பும் பெறுவது உறுதி.

*   *

நாம் ஒருவரைக் கண் முன்பு காணும் வரையிலும், அவர் உயிரோடிருப்பினும் இறந்தவருக்குச் சமானம் தான் என்பது யோசித்துப் பார்த்தால் விளங்காமற் போகாது.

*   *

மனிதர்களில் பணத்தில், படிப்பில், குணத்தில், நடத்தையில், தொழிலில் மற்றும் இன்னனைய வற்றில் உயர்வு தாழ்வு காண முடியுமேயொழிய, பிறப்பில் உயர்வு தாழ்வு காணுவது முடியாததே யாம். எல்லாம் கர்ப்பாசயத்தில் பத்து மாதக் காவலிலிருந்து வெளிப்பட்டவர்கள் தான்.

*   *

இவ்வுலகம் நீத்து சூக்ஷ்ம சரீரியாகும் போது இவ் வுலக வாழ்க்கை ஒரு கனவாகவே யாகும். இவ் வுலகத்திலிருக்கும் போது நித்திரையில் பல கனவுகள் காண்கின்றோம். இக் கனவுகளெல்லாம் கனவுக்குள் கனவுகளே.

*   *

சினந்த முகம் அதிகாரத்துவம் தருவதாகும் என யாருடனும் சந்தோஷதரிசிராய்ப் பழகும் நபர்களுண்டு. இப் பழக்கம் அவர்களைக் கெடுத்துவிடுமே யன்றி வேறு பலன் ஒன்றும் தராது. தம்மை நாடிப் பிறர் வரும் போது தான் இதற்கு ஆயுளுண்டு. பிறரை நாடி இவர்கள் போம் போது பல் லத்தனையும் காட்ட வேண்டியது தான்.

*   *

கிடைத்தற்கரிய தொன்று கிடைத் தொழிவது கண் ணில்லாதவன் கண் பெற்றிழந்து விடுவதொக்கும்.

---

## நான் கிறிஸ்தவன்

("தோண்டன்" எழுதியது.)

பல்லாண்டுகளாகக் கிறிஸ்தவர்களென்று பெயர் வைத்திருந்த பெற்றோருக்கு நான் பிறந்தவன். அவர்களால் வளர்க்கப்பெற்று கிறிஸ்துவ சமுதாயத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாசாலையிலே பயிற்றுவிக்கப்பெற்றேன். பிறந்த சில நாட்களுக்குள் கிறிஸ்துவ ஆலயத்திலே, இயேசுவின் நாமத்திலே குருவாலே தீக்ஷை பெற்றேன். ஆங்கிலேய முறைப்படி நடையுடை பாவனை கொண்டிருக்கிறேன். கிறிஸ்தவக் குடும்பத்திலே பெண் கொண்டிருக்கிறேன். எனது பிள்ளைகளுக்கு ஈசாக்கு, யாக்கோபு, சாமுவேல், சாராள், மரியாள் என்ற வேதப் பெயர்களே தரித்திருக்கிறேன். எனது குடும்பவாழ்வு வெகு ஆடம்பரமானது.

உயர்ந்த தோல் கொண்டு கட்டப்பட்ட நான்கு வேத புஸ்தகங்கள் எனக்கு உண்டு. அவைகளை எனது பீரோவின் நடுவறையில் வைத்துப் பூட்டியிருக்கிறேன். மனதுக்குச் சஞ்சலமான வேளைகளில் அவைகளில் ஒன்றை யெடுத்து என் மூத்தமகள் சாராள் கையில் கொடுத்து ஐம்பத்தொன்பதாம் சங்கீதத்தை வாசிக்கச் சொல்வேன். அவள் அருமையான இனிய குரலில் வாசித்து முடித்தவுடனே சுருக்கமான ஜெபம் செய்வேன். எனது பிள்ளைகள் மழலைச் சொல்லால் ம்மா என்று சொல்லத் தெரியாதபடி வாயில் வந்தபடி பூ, பூ, பூ என்று வாயில் ஊறிய நீரோடு உளறும் போதே இயேசு கண்ணீர்விட்டார்; ஜீவ அப்பம் நானே என்ற வசனங்களைப் படிப்பிக்க முயலுவேன். எனது அன்புள்ள மனையாளும் அப்படியே செய்வாள். எனது வீட்டில் எங்கே பார்த்தாலும் நான் உன்தேவன் நீகலங்காதே. கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்பது போலொத்த இனிய வாக்கியங்களை வெள்ளி, தங்கக் கிலிட்டுள்ள எழுத்துக்களால் எழுதி உயர்ந்த இங்கிலிஷ் சட்டமிட்டுத் தொங்கவிட்டிருக்கும். கிறிஸ்து பெருமான் சிலுவையில் அறையப்பட்ட பாவனையான படம் எனக்கு முன்னால் எப்பொழுதும் இருக்கும்படியாக நான் அடிக்கடி யுட்கார்ந்து வேலை செய்கிற அறையிலே மேசையின் மேற்புறத்தில் தொங்கவிட்டிருக்கிறேன். படுக்கும் போதும், உடுக்கும் போதும் இயேசுவே ஐயா! என்று சொல்லிக்கொள்வேன்.

இந்துக்களைக் கண்டால் எனக்கு அருக்களிப்புண்டாகும். அவர்களுடைய உச்சிக்குடுமியும், பூச்சுமானமும் எனக்குக் கொஞ்சமாயினும் பிடிக்காது. அவர்களுடைய மார்க்க புஸ்தகங்களான இராமாயணம், மகா பாரதம், தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி முதலியவைகளைப் பார்த்திருக்கவுமாட்டேன். அவற்றிலுள்ள கதை, பாடல்கள் முதலியவற்றைப் படிக்கின்றவர்களைக் கண்டால் அவர்களை யிகழ்ந்து கூறி அவர்களிருக்குமிடத்தைவிட்டு ஓடிப்போவேன்.

சால்ட் ஆப்காரி சங்கத்திலே நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வேலை பார்க்கிறேன். சொற்ப சம்பளம் பெற்று ஒரு உபதேசியார் வேலைபார்த்து வந்த எனது தந்தைக்கு நான் உயர்ந்த உத்தியோகத்துக்குப் போக வேண்டுமென்றே பெரிய விருப்பமிருந்தது. ஆகையால் அவ்வேலைக்கு நான் வரவேண்டியதாயிற்று. அவ்வேலையில் நான் புகும் போது எனக்கு மதுபானங்களினுடைய ருசியைப்பற்றிக் கேள்வியேயொழிய அனுபோக மில்லாதிருந்தது. கிறிஸ்தவன் மது வுண்ணுவது கூடாதல்லவா? ஆனாலும் மங்கையை மேய்க்கிறவன் பாலைச் சாப்பிடலாமே யென்று எண்ணிக் கொஞ்சங் கொஞ்சமாய்க் குடித்துக் கொள்வேன். ஆனால் மிகுதியாய்க் குடித்து வெறித்துத் தெருக்களிலே அலைந்து திண்டாடமாட்டேன். நான் குடிக்கும் முன் பத்துப்பேர் சேவகர்கள் எனக்குப் பின் வந்தால், குடித்தபின் இருபது பேர் வருவார்கள். கள் சாராயக் கடைக்காரர்கள் நூறு ரூபாய் லஞ்சங் கொடுத்தால் ஆறு ரூபாய் கிறித்துவ ஆலயத்துக்குக் காணிக்கை கொடுத்துவிடுவேன். வருஷத்தில் மீண்டும் இருநூறு ரூபாய் சங்கப் பணம் கொடுக்கிறேன். ஞாயிற்றுக்கிழமைகளில் நாங்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் பையிலே போடுவோம். அங்கே விசேஷித்த நாற்காலி எனக்கும் என் மனைவி பிள்ளைகளுக்கும் உண்டு.

என்னுடைய மேன்மையான ஜீவியத்தைப் பார்த்து என்னோடு பேசுவதற்கும் அனேகர் அஞ்சுவார்கள். எனது தரிசனத்தை விரும்புகிறவர்கள் அழகிய மாலையும், எலுமிச்சைப் பழமும் கொண்டுவருவது வழக்கம். அப்படி வந்தாலும், என்னைப்போன்ற உயர்ந்த உத்தியோகஸ்தரிடத்தில் மட்டும் வாய் திறந்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லுவேன். மற்றவர்கள் கைகூப்பித் தெண்டனிட்டாலும் கருத்துக் கொள்ளாமல் குற்றே வற்காரனைவிட்டு வெருட்டிவிடுவேன். ஜீவனுள்ள தேவனைக் கும்பிடுகிற நான் யாரை மதிக்கவேண்டும்? எனது பணமும் வார்த்தையும் துணையாயிருக்க நான் யாருக்கு அஞ்சுவேன்? உள்ளவனுகிய எனக்கு இன்னுங் கொடுக்கப்படும்.

இவ்வுலகத்தில் கவலை யென்பது எனக்கு அணுவளவேனுங் கிடையாது. என் மனைவி சிமாட்டி. செட்டுமைக்காரி. பிறருக்கு ஒரு பைசாவும் ஈயமாட்டாள். ஏழை எளியவர்கள் வந்தால் உயிர் கொண்டு திரும்புவது அரிது சீமையிலிருந்து சிந்துரை கொண்டு வந்த புல் டாக்குக்கு அவர்கள் இனிய இரையாகுவார்கள். என்னுடைய ஜீவியம் எத்துணை பெருமையானது! நான் கிறிஸ்தவன்.

அன்பர்களே! இதுவே தற்காலக் கிறிஸ்தவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேருக்கதிகமானவர்களுடைய ஜீவியம். பெயர் நல்ல பெயர் தான். செய்கையோ பிசாசுக்கடுத்தது. கிறிஸ்துவை யுடையவன் மட்டுமே கிறிஸ்தவனாவான். பிறனுக்கென்று தனது நலங்களை யிழந்து சிலுவை சுமக்கிறவன் எவனோ அவனே கிறிஸ்தவன். ஊழியங்கொள்ளாமல் ஊழியஞ் செய்கிறவனும் நீதியின் மேல் பசிதாக முள்ளவனும், அன்புள்ளவனும், அருட்கண்ணனும், சுபாவத்தின்படி மாசற்ற குழந்தையும், ஒழுக்கமுடையவனும் எவனோ அவனே கிறிஸ்தவன். இப்படியில்லாமல் நான் கிறிஸ்தவன் என்று சொல்லுகிற மற்ற அனைவரும் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த யூதரும், அவரை விற்றுப்போட்ட யூதாஸ் காரியொத்தும், இவன் யூதருடைய இராஜா என்று கேலி செய்த கீழ் மக்களும், பேய்களும், பேய்களின் புத்திரரும், பகட்டுப் பேருடைய வேசிகளுமாவர். அவர்களுடைய தீர்ப்பின் நாட்கள் பரிதபிக்கப்படத்தக்கவாறு பயங்கரமாக விருக்கும். கனியில்லாமல் தழைத்து விளங்கிய அத்திமரமும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையுமான அவர்கள் சாபத்தை யடைவார்கள். இளவயதிலே தன் புருஷனை யிழந்த பெண்ணைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு வருந்துங்காலம் அவர்களுக்கு வரும்.

கிறிஸ்துவின் காலத்துக்குப் பின்பு கிறிஸ்தவர்கள் என்று பெயர் வைத்திருந்தவர் அனேகர். ஆனால் அந்த பகவானைப்போல விளங்கிய வாழ்க்கை செய்தவர்கள் யாவர்? இரண்டொருவர் தவிர மற்றெல்லாரும் கெமாய்க் கெட்டு செய்யத்தகாதவற்றை விருப்புடன் செய்து கிறிஸ்துவை வருத்தினார்கள். இன்றைக்கும் வருத்தி வருகிறார்கள்.

கிறிஸ்து மார்க்கம் பிறமதத்தவர்களால் பழிக்கப் படுவதற்கிருக்கும் காரணமென்ன? மார்க்கத்தின் கடவுளோ? அல்லது மார்க்கத்தில் சேர்ந்தவர்களோ? கிறிஸ்தவன் என்ற வெற்றுப் பெயரை வைத்துக்கொண்டு தமது தலைவரை மறந்து மனுஷிகமாய் எண்ணி அப்படியே செய்து அவரை அவமானப்படுத்துகிற கிறிஸ்தவர்களுடைய நிலைமை யூதாசுடைய நிலைமைக்கும் மேலாயிருக்குமோ? அவனோ சுமார் ஐந்து ஆண்டுகளாக அறிந்த கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்தான். தற்காலக் கிறிஸ்தவர்களோ வெனில் இரண்டாயிரம் ஆண்டுகளாக அறிந்த கிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கிறார்கள். சிலுவையில் அறைகிறார்கள். ஆகா! இப்பாவத்தை நினைக்குந்தோறும் கிறிஸ்தவன் என்று பெயர் வைத்திருக்கும் சகோதரனே! உன் மனம் கொதிக்கிறதில்லையா? நிலையற்ற வாழ்விலே மயங்கி மேலானவைகளை நாடாமல் நாட்கழித்திருந்தால் உனது நிலைமைக்காக நீ என்ன செய்வாய்? தற்பொழுது நிகழ்ந்துவருகிற போலிக் கிறிஸ்துவின் உலகம் சீர்ப்படும் நாள் எதுவோ? பாவத்தின் மேல் பாவத்தைக் கூட்டி போலிக் கிறிஸ்தவர்கள் அழிந்து போகக்கூடிய அபாயமான நிலைமையைக் கண்டு அருட் கடலாகிய கிறிஸ்துநாதர் தமது கிருபையை அவர்கள் மீது ஊற்றும் நாள் எதுவோ! ஒருவனும் கெட்டுப் போவதைப்பற்றிச் சித்தமில்லாதிருக்கும் கிறிஸ்துநாதர் அவர்களை மீட்டருளும் திருக்கரத்தை நீட்டுகின்ற நாள் எதுவோ! அக்கிறிஸ்தவர்களால் தமது நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி அவர்களைக் கருவியாக உபயோகிக்கும் நாள் எதுவோ!

கிறிஸ்தவர் என்பவர்களின் தற்போதிய நிலைமை மகா பயங்கரமானதால் கிறிஸ்தவர்களென்று பேர் வைத்திருக்கும் சகோதரரே! நாம் இரட்டுடுத்திச் சாம்பலில் உட்காருவோம். பணத்தைக் கொடுத்து மோக்ஷத்தில் இடம் வாங்க முடியாது. கிறிஸ்துவின் இரத்தமே அதற்குப் பெறுமான விலையாதலால் அதைப் பெற்றுக்கொள்வோம். அப்பொழுது நமக்கும் பேரின்பமுண்டு; கிறிஸ்துவும் மகிமைப்படுவார். அக்காலத்தில் மட்டுமே நான் கிறிஸ்தவன் என்று நாம் ஒவ்வொருவரும் சொல்லிக்கொள்ளலாம். தேவகிருபை நம்மோடு இருப்பதாக.

---

## ஆசியக் கொத்து.

கேள்வி:—உமது மகன் திருடி விட்டான். என்ன பரிகாரம் செய்கிறீர்?

பதில்:—அவன் திருடியிருக்க மாட்டான்.

கேள்வி:—யோக்கியனோ?

பதில்:—ஆமாம். இதற்கு முன் எத்தனை தடவைகளோ திருடி என்னிடம் கொண்டு வந்து கொடுத்து யோக்கியமாய் நடந்திருக்கிறான். இப்பொது கொண்டுவந்து கொடுக்கவில்லையாகையால் அவன் திருடியிருக்கமாட்டான்.

---

கோபாலா! என் பரீக்ஷையில் தேறுமலேயிருந்து வருகிறாய் என்றான் கிருஷ்ணன்.

கோ:—உபாத்தியாயர் என் மேல் கொண்டுள்ள அன்பே காரணம்.

கிரு:—என்ன! உபாத்தியாயர் அன்பு கொண்டு விட்டால் நீ பரீக்ஷை தேறமாட்டாயா?

கோ:—அளவுகடந்த அன்பு! அவரை விட்டுப் பிரிய முடியாதவாறான அன்பு!! பரீக்ஷை தேறினால் அவரை விட்டுப் பிரிந்துவிட நேருமன்றோ?

---

திம்மப்பா! ஏன் உன் மனைவி உன்னை காலாலுதைத்தாள்?

திம்:—நான் சோபக்காரன் என்று அவளுக்குத் தெரியுமானதால் விளக்குமாறு உபயோகிக்காமல் அப்படிச் செய்தாள்.

---

கேள்வி—நீ நேற்று ராமயாணம் கேட்கப் போயினையே, எதுவரையும் வந்திருக்கிறது?

பதில்—இது வரையும் இருந்த இடத்தை விட்டு நகழ வில்லை. அம் மண்டபத்தில் தான் இருக்கிறது.

கேள்—முட்டாள்! கதையைக் கவனித்தாயா?

பதில்—கவனிக்கா விட்டால் இவ்வளவு சொல்லத் தெரியுமா?

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# சிறுவர்கள் முன்னேற்றம்.

பாண்டிய ஹரிசான் முக்கர்ஜி 'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையில் எழுதி யிருப்பதன் சாராம்சம் வருமாறு:—

பெண் மக்கள் விடுதலையைப் பற்றி பேசவதே வழக்கமாகவிருக்கின்றது. ஆனால் பழைய கண்மூடி வழக்கங்கட்கும், மூட நம்பிக்கைகட்கும் குழந்தைகளைக் கட்டுப்படுத்தி அவர்களுக்குத் துன்பங் கொடுப்பதைப் பற்றிக் கவனிப்பார் யாருமிலர். பெண்களைவிட அவர்களே ஆடவரைப் பற்றுக்கோடாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால், குழந்தைகட்கும் நமக்கு முன்னை பந்தத்தில் சிற்சில நன்மை தரும் மாறுதல்கள் ஏற்பட்டுவருவது மகிழ்ச்சி தரும் காரியமாகும். நெடுங்காலமாக இவ்வுணர்ச்சி வளர்ந்து வருகிறது. இது முற்றுப்பெற இன்னும் நெடுங்காலமாகும் என்பது திண்ணம். பெண்களைப் போல, குழந்தைகளும் ஜன சமூகத்தில் பரபரப் புண்டுபண்ணவோ, அல்லது நம்மிடம் வேண்டிக் கொள்ளவோ வேண்டுவ தில்லை. நியாய உணர்ச்சியும், குழந்தைகளின் பாலுள்ள நன்மதிப்புமே இம்மாறுதலுக்குக் காரணம். தற்காலக் குழந்தைகளைவிட வருங்கால மக்கள் சிறந்தவர்களாகவும் இன்ப வாழ்க்கை நடத்துபவர்களாகவும் இருப்பார்கள். இம் மகிழ்ச்சிக்குரிய காலம் இன்னும் எய்தாவிட்டாலும், அது கூடிய சீக்கிரம் வரும்படி நாம் யாவரும் முயற்சி செய்து வருகிறோமென்பது உறுதி. அக்காலத்தில் குழந்தைகளெல்லாம் சந்தோஷமாகவும், முழு உரிமை பெற்றவர்களாகவும் இருப்பார்கள். தற்காலச் சிறுவனையோ, அல்லது சிறுமியையோ நாம் நோக்கி, அவர்களது வாழ்க்கை நெறியை ஆராய்ந்தால் மேற் கூறிய உண்மை புலப்படும். அவர்கள் முன்னைவிட சுறுசுறுப்புடையவர்களாகவும், அதிக சுதந்திரம் பெற்றவர்களாகவும் வாழ்கிறார்கள். என்ன செய்யலாமென்றும், என்ன செய்யக் கூடாதென்றும் உறுதியிடும் பல கட்டுப் பாடுகளால் அவர்களது செயல்கள் வேலியிடப்படவில்லை. பையன்களுக்கும் சிறு பெண்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட பாட்டிமார் சட்டங்களெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போய்விட்டன. தங்கள் சொந்த உணர்ச்சிகளை வளர்க்கும்பொருட்டு சகலவித சௌகரியங்களும் அவர்கட்கு அளிக்கப்படுகின்றன. துன்பக்கடலுள் அவர்களை ஆழ்த்தக்கூடிய பலகட்டுப்பாடுகளெல்லாம் உடைத்தெறியப்பட்டன. உலகில் மனிதருட் பலருக்கும் பலவித வேறுபட்ட குணங்கள் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. ஒருவன் கணித சாஸ்திரம் பயில இயற்கையாய் நுட்ப புத்தி உடையவனாயிருக்கிறான், இன்னொருவன் இலக்கியக் கல்வியிற் பயிற்சிபெறத் தகுவதிவாய்ந்தவனாய்த் தென்படுகிறான். முன்னவனை இலக்கியத்தைக் கற்கும்படி நிர்ப்பந்திப்பதும், பின்னவனை கணிதத்திற் புகுத்துவதும் மடமையாகும். இளைஞர்களை அவர்கள் மனப்போக்கின்படி போகவிடாதபடிப் பண்டைக்காலத்திற்றடுத்து வந்ததும் நாட்டிற்குப் பெரு நஷ்டத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இக்கட்டுப்பாடுகளையும் மூட எண்ணங்களையும் எதிர்த்துப் பலர் தம் மனப்போக்கின்படி முன்னேறி உலகுக்கு நன்மைபயத்திருத்தல் இன்றுங் காண்கிறோம்.

இயற்கை உணர்ச்சிக்குச் செயற்கை முறையைத் தகர்த்து முன்னேற முடியும் என்பது இதினின்றும் புலனாகின்றது. பழைய வழக்கங்களை எதிர்க்கத்தக்க ஆற்றலுடையார் மட்டுமே இவ்விதம் தம் கொள்கைகளைச் சாதிக்கமுடியும். ஆனால் பெரும்பாலான சிறுவர், ஒரேமுறையில் பயிற்றப்படுவதை நோக்கின் மனம் திகிலடைகின்றது. உடல் நிலைக்கும் ஒழுக்க முறைக்கும் ஒவ்வாத வழியில் சிறுவர் வாழ்வு அமைக்கப் பெற்றிருப்பது வருந்தத்தக்கது. [illegible] நோக்குடன் கோல் கைக்கொண்டு வீற்றிருக்கும் ஆசிரியரின் தோற்றமுமே முதன் முதலாக நம் உள்ளத்தில் உதிக்கின்றன. செயலுக்கோ, எண்ணுவதற்கோ அனுமதி கிடையாது. வாத்தியாரின் விசேட முறைகளைக் கண்டு சிரிக்கும் மாணவன் கதி அதோகதியே. இவைகளெல்லாம் சிறிது சிறிதாக மாறி வருகின்றன. 'அடி உதவ்வது போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்', 'அடியாத மாடு பணியாது' போன்ற முதுமொழிகள் மதிப்பற்றுவிட்டன. உடல்நிலைக்கு மாறான இடங்களில் அதிக நேரம் மாணவர்கள் வைக்கப்படுவதில்லை. பெரிய, காற்றோட்டமதிகமுள்ள, வெளிச்சம் மிகுதியாயுள்ள இடங்களிலேயே வகுப்புகள் அமைக்கப்படுகின்றன. திறந்த வெளியிலும், இயற்கை வனப்பின் நடுவிலும் அதிக நேரம் செலவுசெய்யும்படி மாணவர்கள் தூண்டப்படுகின்றனர். கொடி, செடி, மரங்களில் அவர்களுக்கு விருப்பம் உண்டாக்கப்படுகின்றது. மனத்திற்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் கொடுக்கக்கூடிய வாழ்வு, வெளிவாழ்வே ஆகும். அவசியமில்லாத் துன்பங்கட்கு அவர்கள் ஆளாக்கப்படவில்லை. கல்வி போதிக்கும் முறையும் மாறிவிட்டது. பிள்ளைகட்கு எளிதில் புலப்படும்படியான விதத்தில் பாடப்புத்தகங்கள் தொகுக்கப்படுகின்றன. கல்வியை மகிழ்ச்சியூட்டும் விஷயமாக மாற்ற முயற்சிக்கப்படுகிறது. இலக்கணக்கல்விமுன் காலத்திற்போல வற்புறுத்தப் படவில்லை. இலக்கண விதிகளை நெட்டுருப்போடச் செய்வது பண்டைக்கால முறை. இதனால் மூளையின் சக்தி பெரிதாகும் என எண்ணப்பட்டது ஆனால் நற்காலத்தில் இச்சக்தியைப் பெருக்க இலகுவான வழிகண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இயற்கைத் தோற்றத்தைக் கூர்ந்து நோக்கி இயற்கையின் பால் ஒரு பையனை ஈடுபட்டுவிட்டால், ஆராய்ச்சித் திறனில் அவன் மேம்படுவான் என்பது திண்ணம். பள்ளிக்கூட நேரத்தைத் தவிர்த்து பிறசமயத்தில் வாழ்க்கை இன்பமாகவேஇருக்கின்றது. பாடப் புத்தகங்களிலேயே மாணவன் ஈடுபட்டிருக்க வேண்டியதில்லை. வெளி உலகிலும் இயற்கையிலும் அவன் எவ்வளவுகாலம் வேண்டுமானாலும் கழிக்கலாம். இதன் பயனால் அவனது உடல் வலி செழிப்புறுகிறது. விடுமுறைக் கோஷ்டிகள் சேர்க்கப்படுகின்றன. சரித்திரசம்பந்தமாகவும்,இயற்கை வனப்பிற்கிலக்காகவும், அமைந்திருக்கும் சுகாதாரத்திற்குரிய பலவிடங்கட்கு அவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். கல்வியின்ஒருபாகமாகவேஇது கருதப்படுகின்றது. ஒவ்வொரு சிறுவனும் தன்தன்சக்திக்கேற்ற முறையில் பல்வித விளையாட்டுகளையும் விளையாடலாம். இதைவிடச் சிறந்த வாழ்வில்லை. சிறுவர்களின் ஒழுக்கமும் சிறந்த புதிய முறையில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. நீதிகளை மட்டும் அவர்கள் பாராயணஞ் செய்யும்படி விட்டு விடாது, அவைகளை வாழ்க்கையில் உபயோகிக்கும்படி சிறுவர்கள் தூண்டப்படுகிறார்கள். சிறந்த மக்களாகவும், தாய்மார்களாகவும், அவர்கள் வரும்படி பலவித சௌகரியங்கள் செய்யப்படுகின்றன. தாய்தந்தையர், உபாத்தியாயர்கள், இவர்கட்குக் கீழ்ப்படிதலும், அரசாங்கத்தினிடம் ராஜபக்தி காட்டுவதும், யாவரையும் அன்புடன் நேசிப்பதும் சிறுவர்களுக்குப் போதிக்கப் படுகின்றன. இவ்விஷயத்தில் சாரணரியக்கம், சிறுமியர் குழு முதலியன பெரும் வேலை செய்து வருகின்றன. இவ்வியக்கங்கள் நம் நாட்டில் வேரூன்றிப் பரவி விடுமென நம்புகிறேன்.

இதுவரையில் சிறுவர்கள் நியாயமற்ற வழிகளிலேயே பராமரிக்கப்பட்டு வந்தார்களென்பதை நாம் அறிந்துகொண்டோம். வைத்தியசாலைகளில் அவர்கள் நன்கு கவனிக்கப்படல் வேண்டும். இளவயதில் தண்டனை அடைந்தவர்களை ஒன்று சேர்த்து வைப்பதால் அவர்கள் தீயர்களாகவே மாறுகிறார்கள். போர்ஸ்டல் முறையான இவ்விஷய[illegible]தாகும். வயதுமுதிர்ந்தகுற்றவாளிகளைத் தண்டிக்க நியமிக்கப்பட்டிருப்பவரைப் போல் இளைஞர்களைத் தண்டிப்போரிருக்கவில்லை. சிறுவர்களின் இயற்கை இயல்பை நன்கறிந்தவர்பெண்களே. ஆதலால்மேற்கூறியமுறைப்படி பெண்களே இளங் குற்றவாளிகளை விசாரணைசெய்ய ஏற்படுத்தப்படுகின்றனர். நம்நாட்டிலும் இம்முறை அநுஷ்டிக்கப்பட்டால் நலம் பயக்கும் என்பதற்கையமில்லை. நாம் சிறுவர்கட்கு எவ்வளவு சுதந்திரம் கொடுத்தபோதிலும், அவர்கள் நோயின்றியிருந்தால் தான் நன்மை உண்டாம். சிறப்பாக நம் நாட்டில் குழந்தை மரணவிகிதம் அதிகமாக இருக்கின்றது. நோய்களுக்குத் தப்பிய பலர் புல்வாழ்வு வாழ்கின்றனர். பெரும்பாலார்தம் வாழ்க்கையை நடத்தப் போதிய சக்தியின்றி விழிக்கின்றனர். நமது அறியாமையும் சுகாதாரத்தில் நாம் செலுத்தும் கவனக் குறைவுவே இதற்குக் காரணம் எனக் கூறத் தேவையில்லை. ஆரம்பப்படிப்பு அனேகமாக இலவசமாகவும் கட்டாயமாகவுமிருக்கிறது. மேனாடுகளில் அனேகமாக எல்லாப் புத்தகாலயங்களிலும் சிறுவர்க்கென ஓர் பகுதி ஒதுக்கப்பட்டிருக்கும். அவர்களுடைய உளத்தைக் கவரத்தக்க புத்தகங்களும் பத்திரிகைகளும் அங்கு நிரம்பியிருக்கும்.

இக்கொள்கைகள் நம் நாட்டில் பரவிய போதிலும், இவற்றை நடைமுறையில் கொண்டுவர நம் வறுமை சம்மதிக்கவில்லை. இலவசக் கட்டாய ஆரம்பப் படிப்பு இன்னும் நம் நாட்டில் ஏற்படுத்தப்படவில்லை. சிசுக்களைப் பற்றிக் கவனிக்கக்கூடிய நிலையங்களும் நிறுவப்படவில்லை. மாறுதல் பெறாத கீழ்நாட்டில், பெண்கள் உயர்தரக்கல்வி கற்க முன் வந்துவிட்டார்கள். மணவினை முடிப்பதற்கும், மகப்பேறு ஈவதற்குமே பெண்களென்னும் கொள்கை மாறிவிட்டது. சாரணரியக்கமும் பரவி வருகின்றது. பழைய மூடக்கொள்கைகளை நாம் விடுவது வரை நம் நாடு விடுதலை பெறாது என்பது நிச்சயம்.

## மதிப்புரை.

### கமலாசனி.

இப் பெயர் புனைந்த தமிழ் நாவலொன்று எமது பார்வைக்குக் கிடைக்கப் பெற்றோம். இது பாளையங்கோட்டையைச் சார்ந்த குறும்பலாப் பேரி வி. எம். எஸ். நார்மல் ஸ்கூல் தமிழாசிரியரும் சிறந்தகட்டுரையாளருமான ஸ்ரீமான் பண்டித ஆ. ஜெபரத்தினமவர்களால் இயற்றப்பட்டது. படிப்பதற்கு இனிமை பொருந்தியதாயும் செந்தமிழ் நடையில் தீட்டப்பெற்றதாயு மிருக்கிறது. இதிற் காணப்படும் நீதிகளும், உவமைகளும் பல பல. நமது நாட்டிலே சிறந்த ஒழுக்கங்கள் கிடையாவென்று சாற்றும் பேதையர்களுக் கறிவுறுத்துவான் பொருட்டு இது வெளியிடப்பெற்றிருக்கிறதென இதன் ஆசிரியர் கூறுதல் பொருந்தும். நல்ல தாளில் 100 பக்கத்தில் 7 அத்தியாயங்களாக அச்சிடப் பட்டிருக்கிறது. விலை அணா 10. தேவையுள்ளோர் இதன் ஆசிரியருக்கெழுதிப் பெறவும்.

### பழிக்குப் பழி.

பிரான்சு தேசத்திலுள்ள ஒரு பெரும் பணக்காரர் பெண்ணினம் முழுவதையும் ஒரு விநோத வழியில் பழி வாங்கி வருவதாகச் சொல்கிறார். இவர் முதவில் மிகவும் ஏழையா யிருந்தவர். அப்போது இவர் கலியாணம் செய்து கொள்ள ஆனமட்டும் முயன்றும் பலிக்க வில்லையாம். அவருக்குத் தெரிந்த பெண்கள் எல்லாரும் அவரை மணந்து கொள்ள மறுத்துவிட்டார்களாம். பின்னர் அவர் வியாபாரத் துறையில் வெற்றியடைந்து பெருஞ் செல்வராகி விட்டார். அவர் காரியாலயத்தில் 500 குமாஸ்தாக்கள் வேலை செய்கிறார்கள். அவர்களில் ஸ்திரீ ஒருத்திகூட இல்லையாம். "இப்போது பெண்கள் பலர் என்னை மணந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். ஆனால் நான் ஏன் அவர்களைத் திரும்பிப் பார்க்க வேண்டும்? அவர்களெல்லாரும் கன்னிகைகளாகவே காலங் கழிக்கட்டும்" என்று அவர் சொல்கிறாராம்.

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

செய்யும் பரோபகாரத்தை விலைமதிக்க பிறர்க்குத்தெரியும். அதைப்பற்றி நாம் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை. நாம் செய்யும் உண்மைச் செய்கையால் அறிஞர் கொடுக்கும் வெகுமதியானது புகழ். உழைப்புக்குத் தகுந்த கூலியுண்டு. ஆனால் பலனை எதிர்பார்க்க நமக்கு அதிகாரம் கிடையாது. பிறரடையும் பெருமையைத் தடுக்க முயன்றால் அது நமக்கே எதிரொலிபோல் திரும்பும். ஆகையால் இன்று ராஜ்யபரிபாலனம் செய்து கொண்டிருக்கும் திங்களோடும் அதன் படையான விண் மீன்களோடும் யுத்தம் தொடுக்கவேண்டாம். யோசியுங்கள். அறிவை நேசியுங்கள். உண்மையைப் பூசியுங்கள் கடவுள் ஆசியுங்கள்பக்கம். நன்மையைச் சொன்னேன். உண்மையைச் சொன்னேன். (இல்லை இல்லை என்ற சொல் சபையிலிருந்து உதித்துக் கொண்டேயிருந்தது) முன்பின்வருபவைகளையும் சிந்தித்துச் செய்யுங்கள் என்றுபிரசங்கம் செய்து உட்கார்ந்தது.

தோல்வியடைவோர்க்கு பிறர்கூறும் நல் யோசனையும் தீயவை போற்றோற்றுவதோடு செவிடன் செவியில் சங்கூதியதுபோல் பயனின்றியும் முடியும். இவ்வார்த்தைகளைச் சபை லக்ஷியம் செய்ததாகவும் தோற்றவில்லை. நல் விஷயங்களை ஸ்தாபனம் செய்யும் போது பல தீமைகளும் இடர்கட்டைகளாக வந்து எதிர்க்கின்றன. தீமைகள் மூளைக்குமிடங்களிலும் நன்மைகள் தோன்றி அறிவுறுத்தாமலில்லை. அவ்விடத்தில் தீமைகள் அபிவிர்த்தியாகி காரியங்கள் மிகுந்த ஜாக்கிரதையோடு வெகு சாமர்த்தியமாய் நடந்தாலும் இறுதி துக்கிக்கத்தக்கதாகவேயிருக்கும். நிற்க,

மேகங்களெல்லாம் யுத்தத்திற்குக் கிளம்பின. படபடாவென இடி தடபுடலாகஇடித்தது. மின்னலாயுதங்கள் மின்னின.மேகங்கள் தங்கள்காரியம் ஜெயிப்பதற்காக இடி, மின்னல் முதலியவைகளை தம் பக்க பலமாய்ச் சேர்த்துக் கொண்டன. அவைகளெல்லாம் சிற்றரசுகள் போன்றவை. சந்திரன், விண்மீன் முதலியவைகளோடு மேகங்கள் யுத்தத்திற்குக் கைகலந்தன.

யுத்தத்திற்குச் செல்லல் வேண்டாமெனக்கூறிய மேகத்தின் கக்ஷியிலும் சில மேகங்கள் சேராமலில்லை. இவைகளை லக்ஷியம் செய்யாமலே அம்மேகங்கள் வெகு ஊக்கமாய்ச் சண்டைக்குக் கிளம்பின. எதிர்க்கட்சியிருந்தால் தான் எடுத்த கட்சி பலப்படும். கடலுள்ளவரை அலைகளுண்டாவது போல் மனிதர்களுள்ள வரை கட்சிகள் தோன்றியும், உயர்ந்தும், தாழ்ந்தும், மறைந்துகொண்டுமேயிருக்கும். கல்வி அதிகப்பட அதிகப்பட அறிவும் அதிகப்படுகிறது. அறிவு மிகுதிப்பட பல கட்சிகளும், சட்டவிதிகளும், சாமர்த்தியம், தந்திரம் முதலியவைகளும் முளைத்துக்கொண்டே இருக்கும். சிறுகட்சி தோன்றுவது, நியாயப் பெருங்கட்சிக்கு இடராயிருந்தாலும் அது பெரும் நன்மைக்கே அறிகுறி. எதிர் கட்சியிருந்தால் தான் ஜாக்கிரதை, அபிமானம், ஊக்கம், பலம், உழைப்பு, அபிவிர்த்தி, செழிப்பு, ஜெய மெல்லாமுண்டு. நிற்க,

திடீரென எதிரிகள் நயவஞ்சகமாக வந்ததினாலும், பக்க பலமில்லாததினாலும் திங்களின் படைகள் மேகங்களின் படைகளினால் ஜெயிக்கப்பட்டன. அபஜெயப்பட்ட மதி, மேகங்களால் மறைக்கப்பட்டது. மேகங்களெல்லாம் தங்கள் சந்தோஷ ஜெயத்தால் ஆனந்தக் கூத்தாடுவதுபோல அங்கு மிங்கு மோடி விளையாடின. நிலவை ஜெயித்து மறைத்து இருளைத்தந்த மேகங்களுக்காக உலகிலுள்ள கள்ளக்காதலர்களும், கள்வர், கொலைஞர், மர்ம விஷயங்களிலீடுபட்டவர்கள் முதலிய எல்லோரும் மான வீக தந்தி மூலம் நல்வரவேற்றார்கள். நன்மையோ துன்மையோ எக்கக்ஷியையும் ஆதரிக்க எங்கும் ஆட்களிருக்கிறார்கள். அவைகளை ரூபிக்க புராண இதிகாசங்களின் ஆதாரங்களும் குவிந்து விடுகின்றன.

(தொடரும்.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection